

# அலெக்சாந்தரும் அசோகனும்

ப. ராமஸ்வாமி

இன்ப நிலையம்

# அலெக்சாந்தரும் அசோகரும்

For more ebooks vist: http://getmyebook.in/

# தியாகி ப. ராமசாமி



**1996**

**24 பிப்ரவரி, 2024 அன்று விக்கிமூலத்தில் இருந்து பதிவிறக்கப்பட்டது**

For more ebooks vist: http://getmyebook.in/




## உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

## பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என

For more ebooks vist: http://getmyebook.in/

பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டு முயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.


## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

For more ebooks vist: http://getmyebook.in/

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community

( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

---

# அலெக்சாந்தரும் அசோகரும்

# ப. இராமசாமி

For more ebooks vist: http://getmyebook.in/

NELLAI PUTHAKA NILAYAM
Publishers & Book Sellers
THANA MUNA BUILDING.
TIRUNELVELI JN.

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-4

முதற் பதிப்பு, நவம்பர், 1966

(10.9 கி. கி. வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டது.)

**விலை**

For more ebooks vist: http://getmyebook.in/

அச்சிட்டோர் : ஜீவன் பிரஸ், சென்னை-5.

---

# முன்னுரை

அலெக்சாந்தரும் அசோகரும் உலகப் பெருவீரர் என்று புகழ்பெற்றவர்கள். அலெக்சாந்தர் இறுதிவரை வாளையே நம்பி இருந்தவர். அசோகர் போர்வெறி கொண்டு பல போர்களில் வெற்றிமாலை சூடியவர்; இடையில் வாளை எறிந்துவிட்டு ஆன்ம வலிமையையே துணையாகக் கொண்டவர்.

மாவீரர் இருவரின் சுருக்கமான வரலாறுகளைக் கொண்டது இந்நூல். அன்பு, வீரம், ஒப்புரவு, ஒருமைப்பாடு முதலிய பண்புகளைப் பின்னணியாகக் கொண்டு இந்நூல் இனிய எளிய நடையில் இயற்றப்பட்டுள்ளது.

For more ebooks vist: http://getmyebook.in/

வருங்காலப் பெரியோர்களாகிய தற்கால இளைஞர்கள் ஆர்வத்துடன் கற்றுச் சிறந்த குடிமக்களாக வேண்டுமென்னும் நோக்கத்துடன் இந்நூலை வெளியிடுகின்றோம்.

இதனைச் சிறந்த முறையில் இயற்றியுதவிய ஆசிரியர் திரு. ப. இராமசாமி அவர்களுக்கும், இந்நூல் அச்சாகும் காலத்து உடனிருந்து செம்மையாகத் திருத்தியுதவிய புலவர் திரு. தணிகை உலகநாதன் அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

கல்வி யுலகம் இதனை ஏற்று ஆதரிக்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

—பதிப்பகத்தார்.

---

# பாடமும் பக்கமும்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மாநிலம் போற்றும் மகத நன்னாடு | ... | 5 |
| 2. | யவனர் படையெடுப்பு | ... | 17 |
| 3. | முதல் இந்தியப் பேரரசு | ... | 44 |
| 4. | பேரரசர் அசோகர் | ... | 57 |
| 5. | பேரரசின் சின்னங்கள் | ... | 74 |
| 6. | ஆட்சி முறையும் சமுதாயமும் | ... | 84 |
| 7. | அசோகரின் அருங்குணங்கள் | ... | 94 |
| | கட்டுரைப் பயிற்சி | ... | 97 |


For more ebooks vist: http://getmyebook.in/

# 1. மாநிலம் போற்றும் மகத நன்னாடு

பொன்னாடு என்று எந்நாடும் போற்றும் பெருமை மிக்கது நம் தாய்நாடு. வீரத்திலும் தீரத்திலும் வண்மையிலும் திண்மையிலும் உயர்ந்த நாடு நம் பாரதம். பண்டைக் காலத்திலேயே நம் நாடு பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய நகரங்களைக் கொண்டிருந்தது. அவற்றுள் ஒன்று பாடலிபுத்திரம். மகதப் பேரரசின் தலைநகரான பாடலிபுத்திரம் மாற்றலர் கண்டு மலைக்கும் கோட்டையுடையது. கோட்டையில் வானோங்கி வளர்ந்த ஐந்நூற்றெழுபது கோபுரங்களும், அறுபத்து நான்கு வாயில்களும் உண்டு. நகரின் நடுவில், எழில் மிகுந்த அரண்மனையில், நவரத்தினங்கள் இழைத்த தங்கமணித் தொட்டிலில் கண்வளர்ந்து கொண்டிருந்தான் குழந்தை அசோகன் கைகளிலே ஒலிக்கும் முத்து வளையல்களும், கால்களிலே ஒலிக்கும் சிலம்புகளும் அணிந்து, பொன்னாடை புனைந்த பெண்மணிகள் பலர் சூழ்ந்து நின்று, இன்னிசை யாழ்போல் தாலாட்டுப் பாடித் தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தனர். சிறிது தூரத்திலே நின்று அக்காட்சியைக் கண்டு களித்துக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி சந்திரகுப்தர். அசோகனைப்போல் அவர் குழந்தையா யிருந்தபொழுது, மாடுகளுக்குப் புல்வைக்கும் மரத்தொட்டியே அவருக்குத் தொட்டிலாக இருந்தது. அவருடைய அன்னை அச்சமயம் வனத்திலே ஒரு குடிசையில் வாழ்ந்திருக்க நேர்ந்ததால், அவர் அத்தகைய ஏழ்மையில் வாழ வேண்டியிருந்தது. அவர் தம் அருமைப் பேரனுக்காகத்

For more ebooks vist: http://getmyebook.in/

தங்கத் தொட்டில் மட்டுமன்றி, அவன் செங்கோல் செலுத்துவதற்காக மகதப் பேரரசையும் அமைத்து வைத்திருந்தார்.

தொட்டிலிலே துயின்ற குழந்தையைப் பார்த்து அவர் பெருமிதம் கொண்டார். அப்பொழுது அவர் என்ன எண்ணியிருப்பார் என்பதை நாம் இக்கற்பனை மூலமே கண்டுகொள்ள முடியும்:

‘குழந்தாய்! என் செல்வமே! மோரியர்தம் குலக் கொழுந்தே! அசோக வர்த்தனா! உன் சிறிய தோள்கள் இந்தப் பெரிய ஏகாதிபத்தியத்தை எப்படித் தாங்கப் போகின்றன? தங்குவதற்கு ஓர் அடி நிலம்கூட இல்லாமல் நாட்டிலிருந்து துரத்தப் பட்ட நான், உனக்காக மிக்க பரப்பினை உடைய மகதப் பேரரசை அமைத்திருக்கிறேன். என் செல்வமே! உன் தந்தை **பிந்துசாரனும்** பல போர்களில் வென்று ‘அமித்திர காதா’ (பகைவர்க்கு எமன்) என்னும் பட்டம் பெற்று விளங்குகிறான். ஆதலால், நீ செய்ய வேண்டிய போர்கள் அதிகமில்லை. நம் ஆட்சி பாரசீகத்தின் தென் எல்லையிலிருந்து விந்திய மலை வரையிலும், அசுவகனியிலிருந்து (ஆப்கனிஸ்தானம்) காமரூபம் (அஸ்ஸாம்) வரையிலும் பரவியுள்ளது. இனி நீ வெல்ல வேண்டிய இரு இராச்சியங்களே உள்ளன. அவை தெற்கேயுள்ள கலிங்கமும், திராவிடமும்.

‘யவன வீரனான **அலெக்சாந்த**ரை நான் நேரில் பார்த்திருக்கிறேன். நீ அவனைப்போல் வரவேண்டும் என்பதே என் ஆவல்.

‘துயிலும் பொழுதே நீ புன்னகை புரிவதைப் பார்த்தால், என்னையும் நீ வென்று விடுவாய் என்று

For more ebooks vist: http://getmyebook.in/

ஏளனம் செய்வதுபோல் தோன்றுகின்றது. போர்களிலே என்னைப் பார்க்கிலும் அதிக வெற்றிகளை நீ பெற முடியாது. எனக்கு நல்லமைச்சராக இருந்த சாணக்கியர் நீ அரியணை ஏறும் வரை இருப்பாரோ, என்னவோ? ஆனால் அவர் எழுதி வைத்துள்ள 'அர்த்தசாத்திர' ஏடு உள்ளது. அதன்படி அரசியல், பொருளாதாரச் செய்திகளை ஐயம் திரிபுகள் அறக் கற்று, அதைத் துணையாகக் கொண்டு ஆட்சிபுரிந்தால், பேரரசு மக்கள் அனைவருடைய அன்பையும் நீ பெறமுடியும். ஆட்சி முறை ஒன்றிலேயே நீ என்னையும், உன் தந்தையையும், முன்னால் இருந்த பாரத நாட்டு மன்னர்களையும் வெல்ல முடியும்.'

சந்திரகுப்தர் மகதராச்சியத்தைப் பெரிய பேரரசாக அமைப்பதற்கு முன்னும் பின்னுமாக அஃது ஆயிரம் ஆண்டுக்காலம் நிலைபெற்று நின்றது. மகதம் என்பது இப்பொழுதுள்ள பீகார் இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. மகதத்தைப் பற்றியும், அங்கு அரசுபுரிந்த சில அரச பரம்பரைகளைப் பற்றியும் பழந் தமிழ் நூல்களில் சில குறிப்புக்கள் உள்ளன. 'மறந்தும் மழைமறா மகதநன் னாடு' என்பது நீர்வளமுள்ள மருத நிலங்கள் நிறைந்த அந்நாட்டின் செழிப்பை எடுத்துக் காட்டும்.

'சோழவள நாடு சோறுடைத்து' என்றும், 'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்றும் புகழப்பெற்றிருக்கின்றன. மகத நாடு சோற்றையும் சான்றோர்களையும் ஒருங்கே பெற்று விளங்கியது. **சியவனர், ததீசி** போன்ற முனிவர்களும், வடமொழித்

For more ebooks vist: http://getmyebook.in/

தொல்காப்பியரான **பாணினி**யும், அவருடைய சூத்திரங்களுக்கு உரை செய்த **வரருசியும்**, யோக சூத்திரங்களின் ஆசிரியரான **பதஞ்சலி** முனிவரும், வான நூலின் தந்தை என்று புகழ்பெற்ற **ஆரியபட்ட**ரும், அசோகரின் ஆசிரியரான **பிங்கல**ரும் மகதத்திலே வாழ்ந்து பெருமை பெற்றவர்கள். மகதத்து அமைச்சர்கள் மதிவாணர்கள் என்று மகாபாரதம் புகழ்ந்துரைக்கின்றது. உலகப் புகழ் பெற்ற **தட்சசீலம், நாலந்தா, விக்கிரமசீலம்** ஆகிய பல்கலைக் கழகங்கள் பாரத நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்ந்தன. இவைகளில் ஆசியாவின் பல நாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்து பயிற்சி பெற்றனர். தட்சசீலம் மகதப் பேரரசிலிருந்து பிரிந்து நெடுங்காலம் தனித்திருந்ததும் உண்டு. ஆனால் நாலந்தாவும், விக்கிரமசீலமும் மகத எல்லைக்குள்ளேயே இருந்தவை.

மகதத்திலே தோன்றிய கட்டடங்கள், மாளிகைகள், அரண்மனைகள், அணைகள், மதகுகள் முதலியவைகளைப் பார்த்தால், அங்குப் பொறியியல் நிபுணர்கள் நிறைந்திருந்தனர் என்பது புலனாகும். ஒரே பெரும் பாறையைச் செதுக்கிப் பெரிய கம்பமாக அமைக்கும் கைவினையும், சிலைகள் அமைக்கும் சிற்பக் கலையும், மற்றும் பல நுண்கலைகளும் அங்கே சிறப்புற்று வளர்ந்துவந்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக, பகவான் **புத்தரும், மகாவீரரும்** பல்லாண்டுகள் வாழ்ந்து, முறையே பௌத்த தருமத்தையும், சமண சமயத்தையும் பிரசாரம்

For more ebooks vist: http://getmyebook.in/

செய்த புனித நிலம் மகதம். புத்தர் ஞானமடைந்த தலமாகிய புத்தகயை அங்கேதான் உள்ளது. மகதத்தின் பழைய தலைநகரான **இராஜ** கிரகத்தில் இருந்து ஆட்சி புரிந்துவந்த **பிம்பிசாரர்** பௌத்த தருமத்தை மேற்கொண்டு, பகவானின் தலைசிறந்த அடியாருள் ஒருவராக விளங்கினார். மகாவீரர் பிம்பிசாரரின் பட்டத்து அரசிக்கு நெருங்கிய உறவினர்; இந்திய நாட்டின் முதற் பொருளாதார நிபுணர் என்று போற்றப் பெறும் **சாணக்கியர்,** தமிழ் நாட்டின் பகுதியாயிருந்த மலையாளத்திலே பிறந்தவர். எனினும், அவர் வாழ்க்கையின் பெரும் பகுதி மகதத்திலேயே கழிக்கப் பெற்றது. இந்தியாவின் முதல் சக்கரவர்த்தியாக விளங்கிய சந்திரகுப்தர் மகத மன்னரே யாவார். உலகிலே எட்டுத் திசைகளிலும் இணையற்ற சக்கரவர்த்தியாயும், மாமுனிவராயும் வாழ்ந்த அருள் அசோகரும் அந்நாட்டு மன்னரே. பாடலிபுத்திரம் இப்பொழுது **பாட்னா** என்று பெயர் பெற்றுள்ளது. மொத்தத்தில் பாரத நாட்டின் பழம்பெரும் சரித்திரத்தில் முக்கால் பகுதி மகதத்தின் சரித்திரமாகும்.

மகதத்தின் பல்கலைக் கழகங்களான நாலந்தாவும், விக்கிரமசீலமும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கலைகளிலும், சாத்திரங்களிலும் பயிற்சியளித்து வந்ததுடன், பௌத்த தருமத்தின் வளர்ப்புப் பண்ணைகளாகவும் விளங்கி வந்தன. நாலந்தாவைப்பற்றிச் சீன யாத்திரிகர் **யுவான சுவாங்** விவரமாக எழுதி வைத்திருக்கிறார். தாமரை மலர்களுடன் பல ஏரிகள் சூழ்ந்த இடத்தில், விண்முட்டும் மாடங்களும், கோபுரங்களும் விளங்க,

For more ebooks vist: http://getmyebook.in/

அப்பல்கலைக் கழகம் பதினாயிரம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்டு பணியாற்றி வந்ததாக அவர் குறித்துள்ளார். அங்கே கண்டிப்பான ஒழுக்க விதிகள் கடைப்பிடிக்கப் பெற்று வந்தன. மாணவர்களுடைய வினாக்களுக்கு ஆசிரியர்கள் பதில் கூறி விளக்குவதற்குக்கூடப் பகற்பொழுது போதவில்லை என்று யாத்திரிகர் வியந்துள்ளார். புத்தர் காலத்திலேயே புகழ்பெற்று விளங்கிய நாலந்தா, பின்னால் பல மன்னர்களுடைய ஆதரவு பெற்று வளர்ந்தோங்கி, 12 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை பெருமையுடன் விளங்கிற்று. **இத்-சிங்** என்ற சீன யாத்திரிகர் அதற்கு 200 கிராமங்கள் வரை மானியமாக இருந்ததாகக் கூறியுள்ளார்.

கிரேக்க மன்னரால் அனுப்பப்பெற்ற நல்லெண்ணத் தூதுவரான **மெகஸ்தனிஸ்** கி. மு. 300 இல் மகத நாட்டிற்கு வந்து, நீண்ட நாள் சுற்றிப் பார்த்து, தாம் கண்டவற்றைப் பற்றிய பல குறிப்புக்கள் எழுதியுள்ளார். ஆனால் அவை வேறு சில சரித்திர ஆசிரியர்களுடைய நூல்களிலே மேற்கோள்களாகக் காட்டப் பெற்றிருக்கின்றனவே அன்றி, அவை தனி நூலாக இல்லை. எனினும் அக்குறிப்புக்களைக் கொண்டே மகதப் பேரரசினுடைய பெருமையையும், மக்கள் நிலையையும், தலைநகரான பாடலிபுத்திரத்தின் சிறப்பையும் நாம் தெரிந்துகொள்ள முடிகின்றது. அக்காலத்தில் இந்தியர் வாழ்க்கைக்குத் தேவையான பல வசதிகளையும் ஏராளமாகப் பெற்றிருந்தனர் என்றும், நெடிய உருவமும், நிறைந்த பண்பும் பெற்றுக் கம்பீரத் தோற்றத்துடன் விளங்கினர்

For more ebooks vist: http://getmyebook.in/

என்றும் அவர் எழுதியுள்ளார். மேலும் அவர் தெரிவித்துள்ள விவரமாவது: ‘இவர்களுடைய ஒழுக்கம் மிக்க உயர்தரமானது; நான் சந்தித்த இந்துக்கள் அனைவரும் உண்மையும் ஒழுக்கமும் நிறைந்தவர்களாகக் காணப்பெற்றனர். இந்தியாவில் எழுத்து வடிவமான சட்டங்களில்லை; பண்டை வழக்கத்தை அனுசரித்து நினைவின் துணைகொண்டே இம்மக்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். நீதித் தலங்களில் வீணாக வழக்காடும் மனிதன் பொது நன்மைக்கு எதிராகத் தொந்தரவு கொடுப்பவனாகவே கருதப்படுகிறான். வீடுகளையும் உடைமைகளையும் மக்கள் காவலில்லாமலே விட்டுச் செல்கிறார்கள்; ஆனால், தீயணைக்கப் பயன்படும் கருவிகளை மட்டும் பாதுகாப்பில் வைத்திருக்கிறார்கள். அக்கருவிகள் ஒவ்வொரு வீட்டிலும் இல்லாவிட்டால், வீட்டுக்காரருக்குத் தண்டனை உண்டு. நாட்டில் பெருவாரியான பஞ்சம் தோன்றுவதில்லை; மழை தவறாமல் பெய்வதால், பயிர்களின் விளைவுக்குக் குறைவில்லை.

‘இங்கே நெய்யப்பெறும் மஸ்லின்கள் நான் மற்ற நாடுகளிலே பார்த்தவைகளிலெல்லாம் மென்மையானவை. கைவினைஞர்கள் தொழில் நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்துள்ளனர். அரசவையில் மக்கள் அணிந்திருக்கும் உடைகள் தங்க ஜரிகை வேலைப்பாடுள்ளவை. அவைகளில் மதிப்புயர்ந்த மணிகளும் கோக்கப் பெற்றுள்ளன. மருத்துவக்கலை சிறந்து விளங்கியது. பாம்பு விடத்திற்கு நம் கிரேக்க

For more ebooks vist: http://getmyebook.in/

மருத்துவர்களைப் பார்க்கிலும் அதிகப் பயன் தரும் மருந்துகளை இங்குள்ள மருத்துவர்கள் அறிந்திருக்கிறார்கள்.’

பாடலி, பாடலிபுத்திரம், குசுமபுரம் என்று அதற்குப் பல பெயர்கள் உண்டு. ஆனால், ஒரே பொருளைக் கொண்டுதான் அப் பெயர்கள் அமைந்தன என்று தெரிகின்றது. நகரிலும் நகரைச் சுற்றிலும் மலர்கள் நிறைந்த பாடலி மரங்கள் அதிகம். மற்றும் செடிகளிலும் கொடிகளிலும் பூக்கள் புன்னகை புரிந்து கொண்டேயிருக்கும். வண்டுகள் பாடுவதும், மந்த மாருதத்தால் பூங்கொடிகள் ஆடுவதும் கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கும். எனவே, பூக்களின் பெயரையே கொண்ட அந்தப் பூநகர் தன் பெயருக்கு ஏற்ற எழிலனைத்தையும் பெற்றது என்று கூறலாம்.

அத் திருநகர் சோனை ஆறும் கங்கையும் கலக்கும் கூடலுக்கு அருகில் சோணையின் வடகரையில் அமைந்திருந்தது. இரண்டு ஆறுகளும் பின்னால் தம் போக்கில் மாறிவிட்டன. தற்காலத்துப் பாட்னா நகருக்கு 19 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் கடல் ஒதுங்கியுள்ளது. பாடலி இந்தியாவிலேயே பெரிய நகரம் என்று மெகஸ்தனிஸ் குறித்துள்ளார். நகரைச் சுற்றிலும் பாதுகாப்புக்காகப் பெரிய மரக்கட்டைகளால் மதில்கள் அமைக்கப் பெற்றிருந்தன. மதில்களுக்கு அப்பால், 180 மீட்டர் அகலமும், 13.5 மீட்டர் ஆழமுமுள்ள அகழி அமைந்திருந்தது. மாமன்னராகிய அசோகர் காலத்தில் மர மதில்களை ஒட்டி வெளிப்புறத்தில் காரையாலும் கற்களாலும் பெரிய கோட்டை அமைக்கப்பெற்றதுடன், நகரிலும் அவற்றால் மாட

For more ebooks vist: http://getmyebook.in/

மாளிகைகளும் கட்டப் பெற்றன. நகரில் நேரான அகன்ற சாலைகள் இருந்தன. உலகின் பல பகுதிகளிலிருந்தும் வணிகர்களும், யாத்திரிகர்களும் அங்குக் குழுமியிருந்ததால், வாணிகம், உச்சநிலையிலிருந்தது; சாலைகளில் எந்த நேரமும் வண்டிகளின் போக்குவரத்தும் அதிகமாயிருந்தது.

நகரில் சந்தைகளும், கடைத்தெருக்களும் நிறைந்திருந்தன, அவைகளில் முத்தும், பவளமும், வயிரமும், மணிகளும், தந்தம், தங்கம், வெள்ளியினாலான அணிகளும், பட்டும், சல்லாவும், பாண்டிய நாட்டுப் பருத்தி ஆடைகளும், வாசனைத் திரவியங்களும், மருந்துகளும் இரும்பிலும் உருக்கிலும் செய்த ஆயுதங்களும், ஏராளமான உணவுப் பொருள்களும், காய்களும், கனிகளும், மற்றும் உள்நாட்டுப் பொருள்களும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த பொருள்களும் நிறைந்திருந்தன. பாடலியிலிருந்து அனுப்பப் பெற்ற பொருள்கள் பல மரக்கலங்களின் மூலம் **பாபிலோன், எகிப்து, கிரீஸ்** மற்றும் கீழ்த்திசை நாடுகள் பலவற்றிற்கும் சென்றன.

நகரின் நடுவே முற்றிலும் மரத்தினால் கட்டப் பெற்ற அரண்மனை நடுநாயகம்போல் விளங்கியது. அது மரப் பலகைகள், கட்டைகளினாலேயே அமைந்தது எனினும், அது மிக உயரமாயும், மிக அழகான வேலைப்பாடுகளுடனும் விளங்கியதாகப் பார்த்தவர்கள் வருணித்துள்ளார்கள். தூண்களைச் சுற்றி மூடியிருந்த தங்கத் தகடுகளில் தங்கக் கொடிகளும், பூக்களும், வெள்ளிப் பறவைகளும்

For more ebooks vist: http://getmyebook.in/

பதிக்கப்பெற்றிருந்ததாகவும் அவர்கள் குறித்துள்ளார்கள். அரண்மனையைச் சுற்றிப் பூந்தோட்டங்களும், பொய்கைகளும் கண்ணுக்கினிய காட்சிகளாக விளங்கின. அரண்மனைக்கு வாயில்கள் நான்கு; ஒவ்வொன்றிலும் ஈட்டிகள் முதலிய ஆயுதங்களுடன் போர் வீரர்களும், குதிரை வீரர்களும் காவல்காத்து நின்றனர். உள்ளேயும் மிகுந்த பாதுகாப்புக்கள் இருந்தன. கருவூலம், படைக்கலக் கொட்டில் முதலியவைகளுக்குச் சிறந்த பாதுகாப்பு இருந்ததுடன், அரசருக்கு அருகே அவரைக் காப்பதற்காக வில்லேந்திய வீராங்கனைகளும் படையாகத் திரண்டு நின்றனர்.

இக்காலத்தில் பெரிய நகரங்களில் நகராண்மைக் கழகங்கள் அமைந்திருப்பது போல, 2,000 ஆண்டுகட்கு முன்னரே பாடலியில் முப்பது உறுப்பினர்களைக் கொண்ட நகராண்மைக் கழகம் அமைந்திருந்தது. அக்கழகம் ஆறு குழுக்களாகப் பிரிந்து பணியாற்றி வந்தது. ஒவ்வொரு குழுவிலும் ஐந்து உறுப்பினர் இருந்தனர். முதல் குழு கைத்தொழில்களைக் கவனித்து வந்தது. இரண்டாம் குழு வெளிநாட்டிலிருந்து வந்தவர்களின் நலன்களைக் கவனித்து வந்தது; மூன்றாம் குழு பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்து வந்தது. நான்காம் குழு வாணிகத்தைக் கவனித்தும், பண்டங்களின் மீது தீர்வை விதித்தும், முத்திரையிட்ட நிறைகற்களையும், அளவைகளையும் சரிபார்த்தும் வாணிகத்தை முறைப்படுத்தி வந்ததுடன், அரசாங்கத்திற்கும் மிகுந்த வருவாய் தேடிக்கொடுத்து வந்தது. ஐந்தாம் குழு

For more ebooks vist: http://getmyebook.in/

தொழில்களின் மூலம் கிடைத்த பொருள்களைக் கவனித்து, பழைய பொருள்கள், புதியனவாகச்செய்யப்பெற்றவை, நகரத்தில் செய்யப்பெற்றவை, உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பெற்றவை, வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்றவை என்று வணிகர்கள் பிரித்து வைத்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்து வந்தது. விற்பனைப் பொருள்களின் மீது வரி வாங்கும் பொறுப்பை ஆறாவது குழு ஏற்று நடத்தி வந்தது. விற்பனை விலையில் பத்தில் ஒரு பங்கு வரி விதிக்கப்பட்டதாக மெகஸ்தனிஸ் குறித்துள்ளார். ஆனால், உணவுப் பொருள்கள், காய் கனிகள், விலையுயர்ந்த நவமணிகள், நகைகள் முதலியவற்றிற் கெல்லாம் வெவ்வேறு வகைத் தீர்வைகள் தண்டப் பெற்றன என்று தெரிகின்றது. அரசுக்கு இவ்வருவாய் மிகவும் தேவையானதால், இத்தீர்வை செலுத்தத் தவறியவர்களுக்கும், உண்மை விலைகளை மறைத்தவர்களுக்கும் மிகக் கடுமையான தண்டனைகள் விதிக்கப் பெற்றன; அவர்கள் திருடர்களாகவே கருதப் பெற்றனர். திருடர்களின் உறுப்புக்களை அரிதலும், மரண தண்டனை அளித்தலும் அக்காலத்திய தண்டனைகள்.

நகரில் வேடிக்கைகளுக்கும் விளையாட்டுக்களுக்கும் குறைவில்லை. இக்காலத்திய குதிரைப் பந்தயங்களைப் போல அக்காலத்திலும் இருந்தன. சில சமயங்களில் தேர்களில் இரண்டுபக்கம் குதிரைகளைக் கட்டி, நடுவில் உயர்ந்த காளையையும் கட்டி ஓட்டுவார்கள்.

For more ebooks vist: http://getmyebook.in/

விலங்கினங்களைச் சண்டை செய்ய விட்டு வேடிக்கை பார்த்தலும் உண்டு. இத்தகைய சண்டைகளில் களிறுகள், காண்டா மிருகங்கள், காளைகள், ஆட்டுக் கிடாக்கள் முதலியவை கோரமாக முட்டியும் மோதியும் சண்டை செய்யப் பழக்கப்படுத்தப் பெற்றிருந்தன. பிற்காலத்தில் அசோகர் தீவிரமான பௌத்த தருமப் பிரசாரத்தில் ஈடுபடத் தொடங்கியதும், இவையெல்லாம் அவர் ஆணையினால் நிறுத்தப்பெற்றன.

For more ebooks vist: http://getmyebook.in/

# 2. யவனர் படையெடுப்பு

வட இந்தியா முழுவதையும் வென்று, மகதப் பேரரசை நிறுவி, வரலாற்றில் முதல் பேரரசர் என்ற பெயருடன் சந்திரகுப்தர் கி. மு. 327 முதல் 302 வரை 24 ஆண்டுகள் ஆண்டு வந்தார். அவருக்குப் பின் அவர் மைந்தர் பிந்துசாரரும் வீரப் போர்கள் புரிந்து 25 ஆண்டுகள் வெற்றியுடன் அரசுபுரிந்தார். அவரை யடுத்து, அவருடைய மைந்தர்களில் ஒருவரான அசோகர் அரியணை ஏறி, 41 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். அசோகர் காலத்தில் பாரத நாட்டின் நிலைமையையும், ஆட்சி முறையையும், நாகரிக நிலையையும் நன்கு புரிந்துகொள்வதற்கு அவருக்கு முன்னாலுள்ள வரலாற்றை ஓரளவு தெரிந்துகொள்ள வேண்டும். சந்திரகுப்தர் ஒரு பேரரசை அமைக்கத்தக்க நிலை எப்படி உருவாகியிருந்தது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

சந்திரகுப்தர் தம் குருவும் நண்பருமான சாணக்கியருடன் வனங்களில் அலைந்து கொண்டிருந்த காலத்தில்தான், இந்தியா மேலைநாட்டவரை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஐரோப்பாவிலேயே கல்வி கேள்விகளிலும், நாகரிகத்திலும் அக்காலத்தில் முதன்மையாக விளங்கிய நாடு கிரீஸ் அந்நாட்டை நம்மவர் யவனம் என்றும், அந்நாட்டு மக்களை யவனர் என்றும் அழைத்தல் வழக்கம். யவன நாகரிகமே ஐரோப்பா முழுவதும் பரவி, ஆங்காங்கே கலைகளும், விஞ்ஞானமும், தத்துவ ஆராய்ச்சியும் வளர்வதற்கு

For more ebooks vist: http://getmyebook.in/

உறுதுணையாயிருந்தது. இன்றைக்கும் பல நாட்டுக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கல்வி, அரசியல், தத்துவம் முதலிய துறைகளில் பண்டையவன நூல்கள் பயிலப் பெறுகின்றன. யவன நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே சில அறிஞர்கள் தோன்றி, சமுதாய வாழ்க்கை பற்றியும் மக்களின் ஒழுக்கம் பற்றியும் போதனைகள் செய்தனர். அவைகளை அடிப்படையாகக் கொண்டு அந்நாட்டின் தென் பகுதியிலே **ஸ்பார்ட்டா** அரசும் வடபகுதியில் **அதீனிய** அரசும் அமைந்திருந்தன.

இரண்டு அரசுகளுக்கும் வேற்றுமையும் பகைமையும் இருந்து வந்தன. ஸ்பார்ட்டா தலை சிறந்த ஒரு வீரனுக்குக் கட்டுப்பட்டு, வீர வாழ்க்கை நடத்தி வந்தது. அங்கே இளைஞர்களுக்குச் சிறு வயதிலிருந்தே, உடற்பயிற்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்ற முறையில், கல்வித் திட்டம் அமைக்கப் பெற்றிருந்தது. மக்கள் ஆடம்பரங்களை விரும்பாமல் எளிய வாழ்க்கை நடத்தி வந்தனர். சுக வாழ்வையும், இன்பங்களையும் வெறுத்து, எத்தகைய துன்பத்தையும் எதிர்கொண்டு ஏற்று வீரத்துடன் போர் புரிவதில் அவர்கள் இணையற்றவர்கள். அவர்களிலே ஏழை, பணக்காரர் என்ற வேற்றுமை குறைவு; எல்லாரும் கூடியிருந்து உணவு உண்பது அவர்கள் வழக்கம். குழந்தைப் பருவத்திலிருந்தே மக்கள், வாய்க்கு வந்தபடி பேசாமல், நாவடக்கத்தைக் கடைப்பிடிக்கும்படி பழக்கப்படுத்தப் பெற்றிருந்தனர்.

ஏதன்ஸைத் தலைநகராகக் கொண்ட அதீனிய அரசில் மக்கள் நாகரிகத்திலும், ஆடம்பர

For more ebooks vist: http://getmyebook.in/

வாழ்க்கையிலும் அதிக விருப்பமுள்ளவர்கள். அவர்கள் வாழ்க்கையின் இன்பங்களை நுகர்வதில் ஆர்வமுள்ளவர்கள். நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே அவர்கள், அரசனே தேவையில்லை என்று முடிவு செய்து, குடியரசு அமைத்துக்கொண்டிருந்தார்கள். எந்தச் செய்தியையும் கூடிப்பேசியே அவர்கள் முடிவு செய்வார்கள். இதனால் பேச்சில் வல்லவர்களுக்கு அங்கே அரசியலிலும் சமூகத்திலும் முதன்மையான இடம் கிடைத்தது. சில சமயங்களில் வெறும் கிளர்ச்சிக்காரர்களின் பேச்சைக் கேட்டு, அதீனியர்கள் தங்களுக்கு மிகுந்த தொண்டு புரிந்த பெருந்தலைவர்களையும் தளபதிகளையும் இழக்க நேர்ந்தது. எனினும் அதீனியர் அனைவருமே போர் வீரர்களாக விளங்கினார்கள்.

ஸ்பார்ட்டாவுக்கும் ஏதன்ஸுக்கும் அடிக்கடி போர்கள் நடப்பதுண்டு. இவை தவிர, நாட்டிலிருந்த மற்ற நகரங்களும், ஒவ்வொன்றும் தனி அரசாகக் கருதிக் கொண்டிருந்ததால், யவனர் அனைவரும் ஒரே இனம் என்ற உணர்ச்சியும், அந்நியர் படையெடுத்து வருகையில் யாவரும் ஒன்றி நின்று எதிர்க்கவேண்டு மென்ற எண்ணமும் வேரூன்றி யிருக்கவில்லை.

அந்த நிலையில் ஆசியாவில் பேரரசாக விளங்கிய பாரசீகமும் யவனநாடும் பெரும் போர்கள் செய்ய நேர்ந்தது. முதலில் **தரியஸ்** என்ற பாரசீக மன்னர் ஏராளமான நிலப்படைகளையும், கடற்படைகளையும் கொண்டு தாக்கினார். ஏதன்ஸ் நகருக்கு 32கிலோ மீட்டர்வரை அவர் வெற்றியுடன் சென்று திரும்பினார். அவருக்குப்பின் அவர் மகன் **ஸெர்ஸஸ்** உலகிலேயே

For more ebooks vist: http://getmyebook.in/

பெரும்படை என்று சொல்லத்தக்க படையுடன், யவன நாட்டின்மீது போர் தொடுத்தான். பல சிறு இராச்சியங்கள் அவனுக்கு அடி பணிய ஆயத்தமாயிருந்தன. அந்த நேரத்தில் ஸ்பார்ட்டாவில் ஆண்டுவந்த இரு மன்னர்களில் ஒருவனான **லியோனிதாஸ்** என்ற வீரன் 10,000 வீரர்களுடன், தன் படையைப் பார்க்கினும் பதின் மடங்கு பெரிய படையை எதிர்த்து நிற்கத் தீர்மானித்தான். மலைகளுக்கும் கடலுக்கும் நடுவிலிருந்த **தெர்மோபிலே** என்ற கணவாயைக் காத்து, பாரசீகப் படை முன்னேறிவராமல் தடுக்கும் பொறுப்பை அவன் மேற்கொண்டான். ஒடுங்கிய கணவாய் ஆதலால் ஒரே சமயத்தில் எதிரிகள் பெருவாரியாக உள்ளே நுழைய முடியாது என்றும், தானும் தன் படைவீரர்களும் இடைவிடாது போரிட்டு, எதிரிகள் வர வர அவர்களை அழித்து விடலாம் என்றும் அவன் எண்ணியிருந்தான்.

**க**டல் அலைகளைப்போல் பெருகி நின்ற தன் சேனையைச் சொற்பமான ஸ்பார்ட்ட வீரர்கள் எதிர்த்து நின்றதைக் கண்ட ஸெர்ஸஸ் நகைத்துத் தன் ஆயுதங்களைக் கைவிடும்படி லியோனிதாஸுக்குச் சொல்லியனுப்பினான். அந்த ஸ்பார்ட்ட வீரன், “இங்கே வந்து அவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்” என்று அறைகூவினான். கணவாயில் நுழைந்த பாரசீகப் படையினரை அவனும் அவன் வீரர்களும் கடுமையாகத் தாக்கி வீழ்த்திக்கொண்டிருந்தனர். இறுதிவரை அப்படியே செய்து அவர்கள் வெற்றியும் பெற்றிருப்பார்கள். ஆனால் இடையில் யவனத் துரோகி ஒருவன் அவர்கள் இருந்த இடத்திற்கு

For more ebooks vist: http://getmyebook.in/

வருவதற்கு வேறுவகையாக வழியிருந்ததைக் காட்டிக் கொடுத்து விட்டதால் எதிரிப்படைகள் உள்ளே நுழைந்து, நாற்புறமும் வளைந்து கொண்டன. அப்பொழுதும் லியோனிதாஸ் தளரவில்லை. அவனும் யவன வீரர்களும், முன்னேறிப் பாய்ந்து, வீரப்போர் புரிந்து, வீர சுவர்க்கம் அடைந்தனர். தெர்மோபிலே கணவாயில் லியோனிதாஸ் செய்த போராட்டத்தைப் பற்றிய வரலாற்றை இன்றைக்கும் பல நாடுகளிலும் குழந்தைகள் படித்துப் பயனடைகின்றனர். அவன் பாரசீகப் படையைச் சிறிது காலம் தடுத்து நிறுத்தியதால், எஞ்சியிருந்த யவனர் படை தக்க இடத்திற்குச் சென்று தன்னைக் காத்துக்கொள்ள முடிந்தது.

பின்னால் பாரசீகப் பெரும்படை, கணவாயைக் கடந்து உள் நாட்டிலே புகுந்து, ஆங்காங்கே வெற்றிகள் பெற்று, ஏதன்ஸை நோக்கிச் சென்றது. அப்பொழுதும் அங்கிருந்த தலைவர்களும் தளபதிகளும் போரில் எவர் தலைமை தாங்குவது என்பது பற்றிப் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது அதீனியத் தளபதியாயிருந்த **தெமிஸ்டாகிளிஸ்** என்பான், மிகவும் திறமையோடும் வீரத்தோடும் வாதாடி, பாரசீகப் படையை எதிர்த்து நிற்க ஏற்பாடு செய்தான். முடிவில் அதீனியர்களே வெற்றி பெற்றனர். பின்னர்த் தெமிஸ்டாகிளிஸ், யவனர்களுடைய சிறு கப்பல்களைக் கொண்டு, எதிரிகளின் பெருங் கப்பல்களையும் எதிர்த்து ஓடும்படி ஏற்பாடு செய்தான். பெரும்பாலான பாரசீகக் கப்பல்கள் தகர்க்கப்பட்டன. ஸெர்ஸஸ் மிகுந்த கோபம் கொண்டு குமுறினான்.

For more ebooks vist: http://getmyebook.in/

பின்னர் அவன் தளபதி ஒருவனின் தலைமையில் யவனத்தில் ஒரு பெரும் படையை நிறுத்திவிட்டுத் தன் நாடு திரும்பினான். அடுத்த ஆண்டில் எல்லா இராச்சியங்களிலிருந்தும் யவன வீரர்கள் ஒன்று சேர்ந்து அந்தப் படையை முறியடித்து நாட்டை விட்டு வெளியேற்றி விட்டனர்.

அந்நியர் வெளியேறிய பின்னர், யவன இராச்சியங்கள் தமக்குள் மறுபடியும் போரையும் பூசலையும் வளர்த்துக் கொண்டிருந்தன. கடைசியில் ஸ்பார்ட்டப் படையினரே ஏதன்ஸ் நகரைக் கைப்பற்றி அதன் கோட்டை கொத்தளங்களை அழித்து, அதற்குரிய கப்பல்களையும் தீக்கிரையாக்கினர். அதீனியர் எவ்வளவோ நாகரிகம் பெற்றிருந்த போதிலும், சமூக நன்மைக்காக ஒன்று சேர்ந்து போராடும் மனப்பான்மையை இழந்து நின்றனர். தேர்தலும் போட்டியும் வெற்றியுமே அவர்களுடைய தலைவர்களின் இலட்சியங்களாக இருந்தன. அந்தக் காலத்தில்தான்-கிறிஸ்துவுக்கு 400 ஆண்டுகட்கு முன்- ஏதன்ஸ் நகரத்தின் ஒப்பற்ற அறிஞரான **ஸாக்ரடீ**ஸைச் சமயப் பற்றில்லாத குற்றவாளி என்று கூறி நீதிபதிகள் அவர் விடம் அருந்தி மாள வேண்டும் என்று தீர்ப்பளித்தனர்.

ஏதன்ஸ் வீழ்ச்சியுற்ற பிறகு சிறிது காலம் ஸ்பார்ட்ட மக்களே நாடு முழுவதும் செல்வாக்குப் பெற்று விளங்கினர். பின்பு அவர்களுக்குப் போட்டியாகத் **தீப்ஸ்** நகர மக்கள் தலையெடுத்து அவர்களை அடக்கி வென்றனர். அப்பொழுது அவர்களுக்குத் தலைமை தாங்கிய தளபதி வெற்றி வீரனான **எபிமினாண்டஸ்**

For more ebooks vist: http://getmyebook.in/

என்பவன். அவனைப் பாராட்டிப் போற்றுவதற்கு மாறாக, அவனிடம் பொறாமை கொண்ட சிலருடைய சூழ்ச்சியால், தீப்ஸ் மக்கள் அவனை இழிவு செய்தனர். படைத் தலைமையிலிருந்து அவன் நீக்கப் பெற்று, ககரத் துப்புரவுத் தொழிலாளியாக நியமிக்கப்பெற்றான். அதீனியர்களும், ஸ்பார்ட்டர்களும், பொதுவாக எல்லா யவனர்களுமே சகுனமும் சாத்திரமும் பார்ப்பவர்கள். பகைவர் படையெடுத்து வந்த காலத்திலும், அவர்கள் சகுனங்களைப் பற்றியும், நாளையும் கோளையும் பற்றியும் விவாதம் செய்த பின்புதான் எதிர்த்து நிற்பது பற்றி முடிவு செய்வார்கள். அந்தக் காலத்திலே கூட, எபிமினுண்டஸ், 'தாய்த்திரு நாட்டுக்காகப் போரிடுவதே நல்ல சகுனம் !' என்று கூறிவந்தான். அத்தகைய தூய வீரனைத் தீப்ஸ் நகரத்தார் நீடித்த நாள் இழிநிலையில் வைத்திருக்க முடியவில்லை. மற்றைத் தலைவர்கள் தளர்ந்து வீழ்ச்சியுற்றபின், அவனே மீண்டும் படைத் தலைவனாக்கப் பெற்றான். யவன காட்டின் தென்பகுதியின்மீது அவன் மூன்று நான்கு முறை படையெடுத்து, ஒவ்வொரு முறையிலும் செருக்குடைய ஸ்பார்ட்ட மக்களைத் தோற்கடித்தான். இறுதியில் அவன் போரில் வெற்றி பெறுகையில், எதிரிகள் எறிந்த ஈட்டி ஒன்றினால் குத்தப்பட்டுக் கீழே சாய்ந்தான். உதிரம் ஒழுகி, தாங்க முடியாத வேதனையில் இருக்கும் போதும், அவன் நண்பர்களிடம் போர் என்ன வாயிற்று என்று வினவினானாம். அவனுடைய படைக்கே வெற்றி என்று அறிவிக்கப் பெற்றதும், "எல்லாம் நன்மையே!" என்று அவன் வியந்து கூறினான். இரண

For more ebooks vist: http://getmyebook.in/

வைத்தியர்கள், அவனது உடலில் தைத்திருந்த ஈட்டியை வெளியே உருவியவுடன் அவன் மரித்து விடுவான் என்று அறிவித்தனர். அவ்வாறு ஈட்டியை எடுக்க எவரும் மனம் துணியாதிருக்கையில், எபிமினுண்டஸ், தானே தன் கரங்களால் அதைப் பறித்தெறிந்து, தாயகத்திற்காக மகிழ்ச்சியோடு மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

அவன் மரணத்துடன் தீப்ஸின் பெருமையும் மறைந்தது. அத்துடன் கிரேக்க நாட்டின் சுதந்தரமும் ஒழிந்தது. நகரங்கள், போட்டியும் பொறாமையும் காரணமாக, ஒன்றோடு ஒன்று பொருது கொண்டிருக்கையில், வடக்கே இருந்த மாசிடோனிய நாட்டு மன்னரான **பிலிப்** என்பவர் வட நாட்டின்மீது படையெடுத்து வந்து ஒவ்வொரு நகரமாகப் பிடித்துக்கொண்டார். தெற்கே யிருந்த ஸ்பார்ட்ட மக்கள் மட்டும், 'நாங்கள் தலைமை தாங்கி வழிகாட்டி பழக்கப்பட்டவரே அன்றிப் பிறரைப் பின்பற்றிச் செல்வதை அறியோம்!' என்று கூறி, அவருடன் இணங்க மறுத்தனர். மாசிடோனியரும் மற்ற யவனரைப் போல அதே இனத்தைச் சேர்ந்தவரே யாவர். பிலிப்பின் நோக்கம் யவனரை ஒன்றாகத் திரட்டிப் பாரசீகத்தின்மீது படையெடுக்க வேண்டும் என்பது. ஆனால் அதற்குரிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கையில் அவர் கொலையுண்டு மடிந்தார்.

அவர் விட்டுச் சென்ற வேலையைச் செய்து முடிக்க அவருடைய வீரத்திருமகன் முன் வந்தான். அவன் தான் உலகப் புகழ்பெற்ற **அலெக்சாந்தர்**. கம்பீரமான தோற்றம், நடுத்தர உயரம், கட்டமைந்தமேனி,

For more ebooks vist: http://getmyebook.in/

சிவப்புநிறம் ஆகியவற்றுடன் அவன் காண்பவரைக் கவரும் அழகோடு விளங்கினான் . அவனுடைய வீரமும், மிடுக்கும், எழுச்சியும் யவனப் படைவீரர்களின் உள்ளங்களைக் கவர்ந்தன. இளம் வயதிலேயே அவன் பல போர்களில் வெற்றி பெற்று வந்ததால், அவர்கள் அவனைத் தெய்வப் பிறவி என்றுகூட எண்ணத் தொடங்கினர். அலெக்சாந்தரும் தன்னை அவ்வாறே எண்ணியிருந்தாலும், அதில் வியப்பில்லை. ஆப்பிரிக்கா, அமெரிக்கா,ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களெல்லாம் சேர்ந்து உலகம் மிகப் பெரியது என்பது அக்காலத்திய மக்களுக்குத் தெரியாது. ஆசியாவின் தென்மேற்குப் பகுதியான பாரசீகத்துடன் சேர்ந்த ஐரோப்பாவே உலகம் என்று அவர்கள் எண்ணியிருந்தனர். அலெக்சாந்தர் அந்த உலகு அனைத்தையும் வென்று, ஒன்று சேர்த்து ஒரு குடைக்கீழ் ஆளவேண்டும் என்றே ஆசை கொண்டிருந்தான்.

சிறு வயதிலேயே அலெக்சாந்தர் போர்ப் பயிற்சி பெற்றிருந்தான். யவன மன்னனாக முடி சூடுவதற்கு அவன் தந்தை சீரோனீ என்ற இடத்தில் போராடுகையில், அவனும் கூடச் சென்று உதவி புரிந்ததாக வரலாறு கூறுகின்றது.

பொதுவாக மாசிடோனியர் சிறந்த குதிரை வீரர்களாக இருந்தனர், அலெக்சாந்தரும் இள வயதிலேயே குதிரைகளை அடக்குவதில் தேர்ச்சி பெற்றிருந்தான். ஒரு நாள் ‘பூஸிபாலஸ்’ என்ற முரட்டுக் கருப்புக் குதிரை ஒன்றை அவன் தந்தையும், மற்ற வீரர் சிலரும் பார்த்து, விலை பேசிக் கொண்டிருந்தனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

அப்பொழுது அக்குதிரை ஓரிடத்தில் அடங்கி நில்லாமல், துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. எவரும் அதனருகில் செல்ல முடியவில்லை. அந்த நேரத்தில் அலெக்சாந்தர் தான் அதை அடக்குவதற்கு ஆணையிடுமாறு தந்தையை வேண்டினன். அவரும் இணங்கவே, அவன் துணிந்து அதனிடம் சென்று, நெடுநாள் அதனுடன் பழகியவன்போல், அதை அவிழ்த்து வேறிடத்திற்குக் கொண்டு சென்று, அப்படியே அதன்மீது துள்ளி அமர்ந்துகொண்டு, ஊரை ஒரு முறை சுற்றி வந்து சேர்ந்தான். அதைக் கண்ட மன்னரும் மற்றவர்களும் பெருவியப்படைந்தனர். மரங்களின் வழியாகத் தன் கண்கள் கூசும்படி செய்து கொண்டிருந்த

கதிரொளியால்தான் அக்குதிரை கலங்கிக் குதித்துக் கொண்டிருந்தது என்றும், அதன் கண்களை மறைத்து இடம் பெயர்த்துக் கொண்டு போனதும், அது கூச்சம் தெளிந்தது என்றும் அலெக்சாந்தர் எடுத்துச் சொன்ன பிறகே எல்லோருக்கும் செய்தி விளங்கிற்று. மன்னர் பிலிப் அக்குதிரையை அவனுக்கே அளித்துவிட்டார். அது முதல் பின்னர் அவன் கலந்து கொண்ட போர்களில் எல்லாம் அவன் அக்குதிரையையே பயன்படுத்தி வந்தான்.

For more ebooks vist: http://getmyebook.in/



அலெக்சாந்தர் குதிரையை அடக்குதல்

அதனிடத்தில் அவனுக்கு அளவற்ற அன்பு இருந்து வந்தது. அவன் இந்தியாவுக்கு வந்திருக்கையில், ஒரு போரின் நடுவில், அது கீழே சாய்ந்து இறந்து போனதால், அதன் பெயரால் 'பூஸி பாலஸ்' என்று ஒரு நகரத்தை அவன் நிறுவினான் என்பதிலிருந்து, அதன்

For more ebooks vist: http://getmyebook.in/

மீது அவன் கொண்டிருந்த பற்று எவ்வளவு என்பது தெளிவாகும்.

யவனர்கள் ஒரே இனத்தினராக, ஒரே நாட்டில் வசித்து, ஒரே மொழியைப் பேசி வந்த போதிலும், ஆதியில் அவர்களிடம், தே சி ய ஒருமைப்பாடு இருக்கவில்லை; எனினும் சில இன்றியமையாத செயல்களுக்காக அவர்கள் கூடுவதும் வழக்கம். அத்தகைய செயல்களில் ஒன்று **ஒலிம்பியா** என்ற இடத்தில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வந்த விளையாட்டுப் போட்டி. அதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மல்லர்களும், விரர்களும் அங்குத் திரள் திரளாகக் கூடிப் பந்தயங்களில் கலங்து கொள்வர். ஒரு சமயம் அலெக்சாந்தரின் நண்பர்களும் அவனும் அங்கு நடை பெற்ற ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதற்கு அவன், அதிலே கலந்துகொள்வோர் அனைவரும் அரசர்களாயும், அரசகுமாரர்களாயும் இருந்தால், தானும் செல்ல முடியும் என்று தெரிவித்தானாம். சிறு வயதிலேயே அவனுக்கு அவ்வளவு பெருமித உணர்ச்சி இருந்தது.

சந்திரகுப்தருக்குச் **சாணக்கியர்** வாய்த்திருந்தது போல, அலெக்சாந்தருக்கு **அரிஸ்டாட்டில்** என்ற அறிஞர் குருவாக அமைந்திருந்தார். ஆனால், அவன் அவரிடம் பதின்மூன்று வயது முதல் மூன்று ஆண்டுகள் மட்டுமே பயிற்சி பெற முடிந்தது. அரிஸ்டாட்டில் யவன நாட்டிலேயே நிகரற்ற பேரறிஞர் என்று புகழ் பெற்றிருந்தவர். அவரிடம் தெரிந்து கொண்ட செய்திகளோடு, அலெக்சாந்தர் பிற்கால

For more ebooks vist: http://getmyebook.in/

வாழ்க்கைக்குத் தேவையான ஆராய்ச்சி அறிவையும் பெற்றான். "என் தந்தை எனக்கு வாழ்வளித்தார்; ஆனால் எப்படி வாழவேண்டும் என்பதை எனக்குக் கற்பித்தவர் அரிஸ்டாட்டில்" என்று அவனே கூறியுள்ளான்.

யவன மகாகவி **ஹோமர்** எழுதிய 'இலியாது' என்ற போர்க் காவியத்தைப் படிப்பதில் அலெக்சாந்தருக்கு விருப்பம் அதிகம். இரவு நேரங்களில் அவன் அதைப் படிப்பான்; அவன் உறங்கும் போதும், அஃது அவன் தலையனை யடியிலேயே இருக்கும். பழம் பெரும் யவன வீரர்கள் **டிராய்** நகரை எதிர்த்துப் போராடிய வரலாறு பற்றி அக்காவியத்தில் படித்துப் படித்து, அந்த வீரர்களில் முதல்வனான **அகிலிஸ்** என்பவனைப் போல் தானும் விளங்கவேண்டும் என்று அவன் கருதி வந்தான். மற்றும் அவன் செயல் வீரனாகத் திகழ்வதற்கு அடிக்கடி தூண்டி ஊக்கமளித்து வந்தவள் அவனுடைய அன்னையான **ஒலிம்பியஸ்.** அவள்,"மக்கள் உன்னைப் பெருந்தலைவனாகக் காணவே விரும்புகின்றனர்; நீ புத்தகங்கள் படிக்கிறாய் என்பதைக் கேட்பதற்காக அன்று !" என்று அவனுக்கு நினைவுறுத்துவது வழக்கம்.

அலெக்சாந்தர் இருபதாம் வயதில் அரியணை ஏறினான். அப்பொழுது நான்கு பக்கங்களிலும் அவனைப் பகைவர்கள் எதிர்த்து நின்றனர். ஆகவே அவன், முதற்கண் மாசிடோனியாவில் உள் நாட்டுக் கலகக்காரர்களை அடக்கி, வடதிசையில் வாழ்ந்த அநாகரிக மக்களை வென்று, தென் திசையில் தன் ஆட்சியை ஏற்க மறுத்த திப்ஸ் நகரை முற்றிலும்

For more ebooks vist: http://getmyebook.in/

அழித்துத் தன் ஆற்றலை ஓரளவு யவனர்களுக்கு உணர்த்தினான். பல யவன இராச்சியங்களும் அவன் தலைமையை ஏற்று கொண்டு, பாரசீகத்தின் மீது படையெடுத்துச் செல்ல இசைந்து முன் வந்தன.

அந்த நிலையில் அலெக்சாந்தர் ஆசியாவுக்குள் புகுந்து, பழம் பெரும் பாரசீக நாட்டின் மீது படையெடுத்தான். பல இலட்சம் படை வீரர்களைக் கொண்ட பாரசீகத்தின் தரியஸ் மன்னரை எதிர்த்துப் போரிட அவனிடம் முப்பது அல்லது நாற்பதாயிரம் விரர்களே இருந்தார்கள். அவனுடைய படையில் மாசிடோனியக் காலாட்படையே சிறப்பானது. அப்படையிலிருந்தவர்கள் பெரும்பாலும் ஈட்டிகள் போன்ற கருவிகளை எறிந்து போரிடுவதில் வல்லவர்கள். சண்டை, அவர்கள் ஒருவர்பின் ஒருவராகவும், ஒருவர் பக்கம் ஒருவராகவும் நெருங்கி நின்று, நீண்ட சதுரமான, அணியாகச் சென்று எதிரிப் படைகளைத் தாக்கிக் சிதறச் செய்வது வழக்கம். இதற்காக அவர்கள் தனிப் பயிற்சி பெற்றிருந்தனர்.

அலெக்சாந்தர் பாரசீகப் படைகளை, **கிரேனிகஸ்** நதிக்கரையிலும், பின்னர் **இஸ்ஸஸ்** பின்ற இடத்திலும் இருமுறை முறியடித்தான். மன்னர் தரியஸ் மட்டும் உயிர் தப்பி ஒளிந்து கொண்டார். அவருடைய பரிவாரத்தார்களும், குடும்பத்தினரும் சிறைப்பட்டனர். அவர்களை அலெக்சாந்தர் அன்புடன் முறைப்படி காப்பாற்றி வந்தான். பாரசீகம் தளர்ந்து வீழ்ந்து விட்டதால், மேற்கொண்டு அதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று அவன் ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடபகுதியிலுள்ள எகிப்தின்மீது படையெடுத்தான்.

For more ebooks vist: http://getmyebook.in/

எகிப்தும் அப்பொழுது பாரசீகத்திற்கு அடிமைப்பட்டிருந்தது. அங்கு வெற்றி பெற்று, **நைல்** நதியின் முகத் துவாரத்தில் 'அலெக்சாந்திரியா' என்று தன் பெயராலேயே ஒரு பெரு நகரையும் அமைத்துவிட்டு, ஓராண்டுக்குப்பின் அவன் மீண்டும் ஆசியாவுக்குத் திரும்பி, தரியஸைத் தேடலானான். அப்பொழுது தரியஸ், **யூப்ரடிஸ்** நதிக்கு மேல்புறமிருந்த நாடு முழுவதையும் விட்டுக் கொடுப்பதாகவும், மேற்கொண்டு போரை நிறுத்தவேண்டும் என்றும் அலெக்சாந்தருக்குச் செய்தி அனுப்பினார். அச்செய்தியைப் பற்றிச் சிந்திக்கக்கூட அவனுக்கு மனமில்லை. ஏனெனில், தரியஸ் தனக்குச் சமமான ஓர் அரசன் என்ற முறையில் அவருடன் சமாதானம் செய்து கொள்ளவே அவன் விரும்பவில்லை. ஆகவே அவன், தரியஸ் தன்னை ஆசியாவின் அதிபதியாக ஏற்றுக்கொண்டு, பிறகு அவருக்கு வேண்டியதைத் தன்னிடம் இரந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பதிலனுப்பிவிட்டு, பத்து இலட்சம் வீரர்களைக் கொண்ட பாரசீகப் படையை மீண்டும் முறியடித்து, தரியஸின் அரண்மனையையும் பிடித்துக் கொண்டான். தரியஸ், தப்பி ஓடுகையில், தம் ஆட்களில் ஒருவனாலேயே கொலை செய்யப்பட்டார்.

அலெக்சாந்தர் மிகுந்த தாராள சிந்தையுள்ளவன்; நிதானமாக யோசிக்கும் தன்மை பெற்றவன். ஆயினும் செருக்கும், தான் மனித நிலைக்கு மேம்பட்டவன் என்ற இறுமாப்பும் சில சமயங்களில் அவன் சிந்தையைக் கலக்கிவிடும். பணிந்தவர்களுக்கு அவன் அருள் பொழிவான். எதிர்த்து நின்றவர்களுக்கு அவன் எந்தக்

For more ebooks vist: http://getmyebook.in/

கொடிய தண்டனையும் கொடுத்துவிடுவான். தன் உயிர்க்கு உயிராகப் பழகிய சில நண்பர்களைக்கூட அவன் வதைத்து விட்டுப் பின்னால் வருந்தியிருக்கிறான். முன்னர் யவனத்தில் திப்ஸ் நகரைப் பிடித்ததும், அதை அவன் சுட்டெரித்துவிட்டான். பண்டைப் பெரு நகரங்களான டைர், காஸா போன்றவைகளையும் நெருப்புக்கு இரையாக்கினான். கோடிக்கணக்கான பொருள் மதிப்புள்ள பாரசீக மன்னரின் அரண்மனையும் எரிக்கப்பட்டது. அவன் வெஞ்சினம் கொண்டு விட்டால், பிறகு அதை அடக்கிக் கொள்ளவே முடியாது. எண்ணிறந்த வெற்றிகளும், ஏராளமாகச் சேர்ந்த செல்வங்களும் அவனை இறுமாந்திருக்கச் செய்திருக்க வேண்டும்; அவற்றுடன் அளவுக்கு அதிகமான குடிப் பழக்கமும் சேர்ந்து கொண்டது.

அலெக்சாந்தர் மாசிடோனியாவிலிருந்து புறப்படும்பொழுது அவனுடைய படை, யவன வீரர்கள் அடங்கிய தேசியப் படையாக இருந்தது. ஆனால், பல நாடுகளில் வெற்றி பெற்று, ஆங்காங்கே புதிய புதிய இனத்தார்களைப் படையில் சேர்த்துக் கொண்டதால், பின்னால் அது பல நாட்டார் சேர்ந்ததாக விளங்கிற்று. ஆயினும் அதற்கும் தன் மாசிடோனியப் படையின் பயிற்சி அமைய வேண்டும் என்பதில் அலெக்சாந்தர் பிடிவாதமாயிருந்தான். அந்தப் படையில், நீண்ட சதுரமாக நின்று போராடுவதற்கு மாசிடோனியர்கள் தனிப்பிரிவாக அமைந்திருந்தனர். பாரசீக வீரர்களைக் கொண்டு குதிரைப் படை மிகவும் விரிவாகியிருந்தது. வில் வீரர் பலர் கடற்படைக்கு அனுப்பப் பெற்றனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

பாரசீகத்தில் கொள்ளையிடப் பெற்ற பெருஞ் செல்வங்களால் படை வீரர்கள் பேராசை கொண்டு, ஒழுக்கம் குறைந்து காணப்பட்டதால், வண்டி வண்டியாக வந்து கொண்டிருந்த அப்பொருள்கள் அனைத்தையும் தீயில் எரித்துவிட வேண்டும் என்று அலெக்சாந்தர் கட்டளையிட்டான். முதலில் தனக்குரிய பொருள்களை எரிக்கும்படி கூறி, அவன் மற்றவர்களுக்கு வழிகாட்டினான். அடுத்தாற்போல் அவன் தன் படையைக் கிழக்கே திருப்பி, வடமேற்கில் **காவக் கௌஷான்** கணவாய்களின் மூலம் **இந்துகுஷ்** மலைகளைத் தாண்டி இந்தியாவுக்குள் புகுவதற்கு ஏற்பாடு செய்தான். அவனுக்கு முன்னதாக **ஹெபாஸ்டியன், பெர்டிக்கஸ்** என்ற இரு தலைவர்களுடன் போர்த் தளவாடங்களும், ஊர்திகளும், பெரும் படைகளும் **கைபர்க்** கணவாய் வழியாகச் சிந்துநதிப் பள்ளத்தாக்குக்கு அனுப்பப் பெற்றன.

இந்தியாவின் வடமேற்கில் பஞ்சாபிலிருந்த சில நகரங்களை அலெக்சாந்தர் கைப்பற்றி அக்காலத்தில் அசுவகனி என்று அழைக்கப் பெற்ற ஆப்கனிஸ்தான மன்னனான **அசுவஜித்**தின் படையை வெற்றி கொண்டான். அப்பொழுது **தட்சசீலத்து** மன்னரும் அவர் மகன் அம்பியும் அவனிடம் சரணடைந்து, தங்கள் படைகளையும் பொருள்களையும் அவன் பயன்படுத்திக் கொள்ளும்படி உதவி நின்றனர். அவர்கள் அருகிலிருந்த **போரஸ்** என்ற **புருடோத்தம** மன்னரிடம் பகைமை கொண்டனர். அவருக்குப் **பர்வதேசுவரர்** என்றும் பெயருண்டு. வல்லமை மிக்க

For more ebooks vist: http://getmyebook.in/

அந்த மன்னரை அலெக்சாந்தரின் உதவி கொண்டு வீழ்த்த வேண்டும் என்பது அம்பியின் நோக்கம். அதற்கு இசைந்து, அலெக்சாந்தர் தன் படையுடன் தட்சசீலத்தில் போதிய அளவு ஓய்வெடுத்துக் கொண்டு, **ஜீலம்** நதியின் கீழைக்கரையில் ஆயத்தமாக நின்ற போரஸின் படையுடன் போரிட ஏற்பாடு செய்தான்.

ஆற்றின் அகலம் அதிகமாக இல்லாவிடினும், வெள்ளத்தின் வேகம் அதிகமாயிருந்தது. அதைக் கடப்பதற்குரிய பாலம் அமைப்பதற்கு ஓடங்கள் ஆயத்தமாக இருந்த போதிலும், அலெக்சாந்தரின் குதிரை வீரர்களும், காலாட் படையினரும் அக்கரையில் ஏறுவதற்கு வழியில்லாமல் இருந்தது. மாரிக்கால மழை பொழிந்து கொண்டேயிருந்தது. கரை நெடுகிலும் போரஸ் தம் யானைப் படையை நிறுத்தியிருந்தார். 30 மீட்டருக்கு ஒரு யானை வீதம் நின்று கொண்டிருந்த களிறுகளை எதிர்த்துக் குதிரைகள் மேலேற முடியாது. எனவே அலெக்சாந்தர், மேல் கரையிலேயே சில நாள் தங்கி, தன் படையைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கரையில் பல இடங்களுக்குச் சென்று சுற்றி வரும்படி கட்டளையிட்டான். அவைகள் எந்த இடங்களில் ஆற்றைக் கடக்கப் போகின்றன என்பதை எதிரிகள் கண்டுகொள்ள முடியாமல் திகைப்படையவே இந்தத் தந்திரம் கையாளப்பட்டது. இதற்கு ஏற்றபடி போரஸும் தம் யானைகளை அங்குமிங்கும் அலைத்துக்கொண்டிருந்தார். ஆனால் பின்னால் ஆங்காங்கே ஒற்றர்களை நிறுத்திவிட்டு யானைகளை

அவர் வழக்கம்போல் மற்றைப் படைகளுடன் நிறுத்திக்கொண்டார்.

ஒரு நாள் இரவில் அலெக்சாந்தர், தேர்ந்தெடுத்த குதிரைப் படைகளுடன், மேல் கரையிலேயே இருபத்தொன்பது கிலோ மீட்டர்கள் கடந்து சென்று அங்கிருந்து ஆற்றைக் கடந்து, சேற்றிலும் மண்ணிலும் உழன்று, மறுநாள் காலையில் அங்கு வந்து நின்ற போரஸின் படையைச் சந்தித்தான். அவனுடைய காலாட் படையும் விரைவிலே அங்கு வந்து சேர்ந்தது. **செலியூகஸ், பெர்டிகஸ்** என்ற தளபதிகளின் தலைமையில் 6,000 வீரர்கள், தங்கள் வழக்கம்போல் நீண்ட சதுர அணி வகுத்து, முன்னேறிச் சென்றனர். போரில் அலெக்சாந்தரின் அருமைக் குதிரையான பூஸிபாலஸ், தளர்ச்சியடைந்து கீழே சாய்ந்து, மாண்டு போயிற்று. அதற்கு வயதாகி விட்டது. மேலும் அஃது அன்று சேற்றைக் கடந்து வந்ததில் மிகவும் களைப்படைந்திருந்தது. பதினேழு ஆண்டுகளாகத் தனக்கு அரும்பெரும் தொண்டு புரிந்து வந்த கருப்புக்குதிரை ஆயுதங்கள் எதனாலும் தாக்கப்படாமலே இறந்து விழுந்துவிட்டதைக் கண்டு அலெக்சாந்தர் வருந்திய போதிலும், போரின் நடுவே, வேறு ஒரு குதிரையின் மேல் ஏறி, வழக்கம்போல் வாளை உருவிக்கொண்டு முன்னணிக்குச் சென்று சமர் புரிந்தான்.

போரஸின் படையிலிருந்த 300 தேர்களும் 200 யானைகளும், 4,000 குதிரைகளும், 30,000 காலாட் படையும் யவனப் படையை எதிர்த்து மூர்க்கமாகப் போரிட்டன. முன்னணியில் காலாட் படையும், அடுத்து

For more ebooks vist: http://getmyebook.in/

யானைப் படையும், இரண்டு பக்கங்களிலும் தேர்களும் அவைகளுக்குப் பின் குதிரைப் படைகளும், இவை அனைத்திற்கும் பின்னால் காலாட் படை முழுவதும் அணிவகுத்து நின்று போர் செய்தல் அக்காலத்து இந்தியப் போர் முறை. அதன்படியே போரஸின் படையும் அணிவகுத்துச் சென்ற காட்சி கோபுரங்கள், கொடிகளுடன், ஒரு நகரமே பெயர்ந்து செல்வதுபோல் தோன்றியது.

அன்றைய போரைப்போல் யவனர்கள் அதுவரை பார்த்த தில்லை. அலெக்சாந்தர் எதிர்பார்த்த படி அவனுடைய குதிரைப் படைகளும் மறு கரையில் **கிரேடரஸ்** தலைமையில் அவன் நிறுத்தி வைத்திருந்த காலாட்படையும் முறையாகப் போர்க்களம் வந்து சேர்ந்தன. ஆனால், போரஸ் அன்று அந்த இடத்தில் போர் நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை. எப்பொழுதுமே அவர் ஆயத்தமாயிருந்த நிலையில், அன்று யவனர் படையை எதிர்த்துக் கடும் போர் புரிந்தார். யானைகள் அன்று எதிரிகளின் அணிக்குள் புகுந்து மிகுந்த நாசத்தை விளைவித்தன. அவைகளை யவனர் எவ்வாறு அடக்க முடிந்தது என்ற விவரம் தெரியவில்லை. ஒரு வேளை மாவுத்தர்கள்மீது அம்பு தொடுத்து முன்னதாக வதைத்திருக்கலாம். மாண்டு விழுந்த யானைகள் போக, எஞ்சியவைகளை யவனர்கள் பிடித்துக் கொண்டனர்.

யவனரின் அம்பு மழையையும், ஈட்டிகளையும் தாங்காமல் திரும்பி ஓடிய சில யானைகள் போரஸின் படைகளுக்கே சேதம் விளைத்ததாகவும்

For more ebooks vist: http://getmyebook.in/

சொல்லப்படுகின்றது. யவன வரலாறுகளில் இந்தப் போரைப் பற்றிய பல விவரங்கள் இருப்பினும், களத்திலே நடந்த நிகழ்ச்சிகள் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை.

அலெக்சாந்தர் தன் குதிரைப் படையுடன் இந்தியக் குதிரைப் படையின் வலப் பக்கத்தில் புகுந்து தாக்கினான். அதே சமயத்தில் பின்புறத்திலிருந்தும் ஒரு யவனக் குதிரைப் படை தாக்கிக் கொண்டிருந்தது. பல மணி நேரம் மிகக் கடுமையான போர் நடந்தது. அலெக்சாந்தர், தன் குதிரை இறந்துபோன போதிலும், தன்னிடம் குவிந்திருந்த ஏராளமான படைகளைக் கொண்டு, பலவிதமான புதிய போர் முறைகளைச் செய்து பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. இறுதியில் இந்தியப் படைகள் சலிப்படைந்து களைத்துப் போய்விட்டன. 3,000 இந்தியக் குதிரை வீரர்களும், 12,000 காலாட் படையினரும் களத்தில் மடிந்ததுடன், 9,000 காலாட் படையினரும் எதிரிகளிடம் சிறைப்பட்டனர். போரஸ், கடைசிவரை முன்னணியில் நின்று போராடியதில், அவரது இடத் தோளில் காயம் பட்டிருந்தது; உடலில் வேறு எட்டுக் காயங்களும் இருந்தன. மேற்கொண்டு வெற்றிக்கு வழியில்லை என்று தெரிந்தபின், அவர் தமது யானை மீது அமர்ந்துகொண்டு, களத்திலிருந்து திரும்பி விட்டார்.

அவர் திரும்பிச் செல்வதை அறிந்த அலெக்சாந்தர், அந்த வீரரின் உயிரை எப்படியாவது காக்க வேண்டும் என்று கருதி, அவரைத் தம்மிடம் அழைத்து வருமாறு அம்பி மன்னனை அனுப்பினான். அந்நியனைச் சரணடைந்து, நாட்டைக் காட்டிக் கொடுத்த அம்பியின்

For more ebooks vist: http://getmyebook.in/

அழைப்பை அவர் பொருட்படுத்தவில்லை. பின்னர், அலெக்சாந்தரின் படை அதிகாரிகளில் ஒருவன், தம் மன்னனின் செய்தியைப் போய்த் தெரிவித்த பின்னரே, அவர் திரும்பி வந்தார்.

அப்பொழுதுதான் கிழக்கும் மேற்கும் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டு மீட்டருக்குமேல் உயர்ந்திருந்த இந்திய வீரர் போரஸும் நடுத்தர உயரமுள்ள யவன வீரன் அலெக்சாந்தரும் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். வீரன் பெருமையை வீரனே அறிவான். நீர் வேட்கையாயிருந்த போரஸுக்கு முதலில் நீர் அளிக்கப் பெற்றது. அவரது வீரத் திருவுருவையும், தோல்வியுற்றுத் திரும்பிய காலையிலும் துளங்காத உறுதியைக் கண்டு அலெக்சாந்தர், "எந்த வகையில் நான் உம்மை நடத்தவேண்டும் என விரும்புகிறீர் ?" என்று வினவினான்.

அந்தச் சொற்களை அலட்சியத்துடன் கேட்டுக் கொண்டிருந்த போரஸ், "ஓர் அரசரைப் போல..." என்று கூறினார்.

'சரி, உங்களுக்கு வேறு விருப்பம் ஏதாவது உண்டா?'

For more ebooks vist: http://getmyebook.in/



'எல்லாம் அதிலேயே அடங்கியிருக்கிறது!'

இந்த உரையாடல் அன்று முதல் இன்றுவரை
உலகம் எங்கும் பரவியுள்ளது. இதில் யவன

'எல்லாம் அதிலேயே அடங்கியிருக்கிறது!'

இந்த உரையாடல் அன்று முதல் இன்றுவரை உலகம் எங்கும் பரவியுள்ளது. இதில் யவன வீரனின் பெருமையும் பாரத வீரரின் பெருமையும் மிகமிக உயர்ந்த நிலையை எய்திவிட்டன. அலெக்சாந்தர் போரஸின் இராச்சியத்தை அவரே ஆண்டு வரும்படி அளித்தான். ஜீலம் நதிக் கரையில் தன் வெற்றியின் நினைவுக்காக 'வெற்றி' என்ற பெயருடன் ஒரு நகரும், தன் குதிரை பூஸிபாலஸின் நினைவுச் சின்னமாக அதன் பெயரால் ஒரு நகரும் அமைக்கும்படி தன் அதிகாரிகளுக்கு ஆணையிட்டான்.

For more ebooks vist: http://getmyebook.in/

பின்னர் **சீனாப், ராவி** ஆகிய ஆறுகளையும் கடந்து சென்றது யவனர் படை. மலை நகரங்களான முப்பத்தெட்டு நகரங்கள் அதன் வசமாயின. மேற்கொண்டு **பியாஸ்** நதியைத் தாண்ட வேண்டியிருந்தது. அந்த ஆற்றின் கரையிலிருந்தபடியே யவனப் படையினர் தம் தாயகத்திற்குத் திரும்ப விரும்பினர். அங்கிருந்து கிழக்கேயும் தெற்கேயும் இருந்த இராச்சியங்கள் எவை? நாடுகளின் அமைப்புக்கள் எப்படி? என்ற விவரம் எதுவும் அவர்களுக்குத் தெரியாது. அலெக்சாந்தருக்கும், அம்பி முதலிய அரசர்களுக்குமே தெரியவில்லை. அந்த நிலையில் யவன வீரர்கள், தாங்கள் மேலும் செல்ல வேண்டிய இடம் ஒன்றுதான். அது தங்கள் தாய் நாடு என்பதை மன்னன் அலெக்சாந்தருக்குத் தக்க பிரதிநிதிகள் மூலம் தெரிவித்துவிட்டனர். அவனுக்கு அடங்காத சினமுண்டாயிற்று. அவன் குமுறினான்; குதித்தான்; மேலும் வெற்றி வேண்டா; இதுவரை அடைந்த வெற்றிகளை ஒன்று சேர்த்து நிலைநிறுத்திக் கொள்வோம்!' என்று வேண்டினான். அப்பொழுதும் அவன் படை வீரர்கள் தாங்கள் வந்த திசையைப் பார்த்தே திரும்பி நின்றனர். எட்டு ஆண்டுகளாக அவனுடன் கீழ்த்திசை நோக்கி வந்து போரிட்ட அவர்களுக்குப் போரில் ஊக்கமும் உற்சாகமும் இல்லாமற் போனதையும் அவன் உணர்ந்துகொண்டான்.

அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பு மூன்று ஆண்டுக்காலம் நீடித்திருந்தது. இதில் இந்திய

For more ebooks vist: http://getmyebook.in/

மண்ணில் அவன் தங்கியிருந்த காலம் பத்தொன்பது மாதங்களேயாம். அப்பொழுது அவன் இங்கே பல அதிசயங்களைக் கண்டான். அம்பியைப் போன்ற அடிவருடிகள் இரண்டொருவரைத் தவிர, பல்லாயிரம் பாரத வீரர்கள் முன் வைத்த காலைப் பின் வாங்காமல் உறுதியுடன் போர் செய்ததை அவன் கண்டான். போரில் இந்தியர் அறமுறை வழுவாது நின்றதிலும் அவன் வியப்படைந்தான். முன்னர் அவன் வெறும் காட்டுமிராண்டிகள் வாழும் நாடு என்று எண்ணியிருந்தது மாறி, உயர்ந்த நாகரிகமும் செல்வமும் பெற்ற நாடு இஃது என்பதை அறிந்து கொண்டான். யவனர்களைப் போலவே, கல்வியிலும் கலைகளிலும் இந்தியர்கள் ஆர்வமுள்ளவர்கள் என்பதையும், மருத்துவத்திலும், இரண சிகிச்சையிலும் மேம்பட்டவர்கள் என்பதையும் தெரிந்துகொண்டான். எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீக வாழ்வில் இந்தியத் துறவிகள் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்பதையும் கண்டு வியந்தான். போரஸைப் போரில் சந்தித்த பின், இந்நாட்டின் எந்தப் பகுதியையும் நெடு நாள் அடக்கி வைத்திருக்க முடியாது என்பதையும் தெரிந்திருப்பான். அவன் ஊருக்குத் திரும்பு முன்பே, அவன் பிடித்த நாடுகள் ஒவ்வொன்றாக எதிர்த்துக் கிளம்பிவிட்டன.

பஞ்சாபிலிருந்த சமயத்திலேயே, அலெக்சாந்தர் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் யமுனையும் கங்கையும் பாயும் வளமான பிரதேசங்களைப்பற்றியும், மகத இராச்சியத்தைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தான். அப்பொழுது மகதத்தில் ஆண்டு வந்த **நந்த** வமிசத்தைச் சேர்ந்த **சுகற்பன்** என்ற மன்னனிடம்

For more ebooks vist: http://getmyebook.in/

2,00,000 காலாட் படையினரும், 4,000 யானை வீரரும், 20,000 குதிரை வீரரும், 2,000 தேர்களும் இருந்தனர் என்றும், ஆனால் அந்த மன்னனிடம் மக்களுக்கு அன்பு இல்லை என்றும் அவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. சந்திரகுப்தர் சாணக்கியருடன் வடதிசை சென்று அலெக்சாந்தரைக் கண்டு பேசியதாகவும் சில வரலாறுகள் கூறும். தாய் நாடு திரும்ப வேண்டும் என்று முன்னரே துடித்துக் கொண்டிருந்த யவனப் போர் வீரர்கள், நந்த மன்னனிடம் அமைந்திருந்த சேனைகளைப் பற்றி அறிந்திருந்ததால், மேலும் கலவரமடைந்திருப்பார்கள். எனவே, கி. மு. 325 இறுதியில் அலெக்சாந்தர் திரும்பிச் செல்லவே தீர்மானித்தான்.

பாரசீகத்தின் வழியாகச் செல்லும் பொழுது தன் ஆதிக்கத்திலிருந்த ஆசிய மக்களையும் ஐரோப்பியரையும் இணைத்து வைப்பதற்குரிய பல திட்டங்களைப் பற்றி அவன் கனவு கண்டு கொண்டிருந்தான். யவன வீரர்கள் பலர் பாரசீகப் பெண்களை மணந்து கொள்ளும்படி ஏற்பாடு செய்தான். பின்னர், பாபிலோன் நகருக்குச் சென்ற சமயம், கி மு. 323, ஜூன் மாதத்தில் அவன் நோயுற்று, திடீரென்று அங்கேயே உயிர் நீத்தான். அப்பொழுது அவனுடைய வயது முப்பத்து மூன்று கூட முற்றுப் பெறவில்லை. தன்னுடைய தனியாட்சிக்குப் பாபிலோன் நகரையே புதுப்பித்துத் தலைநகராக்க வேண்டும் என்பது அவன் எண்ணம். ஆனால், அது நிறைவேறவில்லை.

For more ebooks vist: http://getmyebook.in/

அலெக்சாந்தர் இறந்த சமயம் அவனுடன் இருந்த எகிப்திய மன்னன் **தாலமியும்**, தளபதிகளான **செலியூகஸ், பெர்டிகஸ், நீயார்கஸ், பியூ செஸ்டஸ்** முதலியோரும் அவன் வென்ற நாடுகளின் ஆட்சிப் பொறுப்பைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர். பின்னர் அந்தப் பேரரசே சிதறுண்டு போயிற்று. தளபதிகளே ஒருவரோடு ஒருவர் போராடினர். அவர்கள் தங்கள் இராச்சியங்களைப் பாதுகாத்து வைத்துக்கொள்ள முடியவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின்னர், யவன நாட்டையே உரோமானியர்கள் பிடித்துக் கொண்டனர் என்பதையும் வரலாற்றில் காண்கிறோம்.

For more ebooks vist: http://getmyebook.in/

# 3. முதல் இந்தியப் பேரரசு

**அ**லெக்சாந்தருக்கு முன்னர் யவன நாடு பல இராச்சியங்களாகச் சிதறிக் கிடந்தது போலவே, அக் காலத்தில் வட இந்தியாவும் இருந்தது; பல அரசர்கள் ஒற்றுமையின்றிப் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். அந்நிலையில், திடீரென்று பெரும் புயல் வீசியது போல, மிக்க தொலைவிலிருந்து அலெக்சாந்தர் படையெடுத்து வந்தான். அவனுடைய போர் முறைகளும், முற்றுகைகளும் உறங்கிக் கிடந்த மக்களை விழிப்படையச் செய்தன. பல மன்னர்கள், இரத்தினங்களிழைத்த மரக்கால்களைப் போல, முடிகளைத் தாங்கிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்றும், நாடு ஒரே பேரரசின் கீழ் ஒற்றுமைப் பட்டிருந்தால்தான் வெளியார் படையெடுப்பைத் தடுக்க முடியும் என்றும் உணரும் நிலை ஏற்பட்டது.

அந்த நிலையைச் சந்திரகுப்தர் நன்கு பயன்படுத்திக்கொண்டார். அவர் பழைய நந்த வமிசத்தைச் சேர்ந்த மகாநந்தியின் வழிவந்தவர்; மகத அரசில் அவருக்கு உரிமை இருந்தது. ஆனால் அப்பொழுது மகதத்தை ஆண்டுவந்த **மகாபத்ம நந்தன்** வஞ்சனையால் இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டவன். அவனுடைய தாழ்ந்த குலத்தையும், அவன் இராணியை வசப்படுத்திக் கொண்டு, மகத மன்னர் மகாநந்தியையும், அவர் மைந்தர்களான இரண்டு இளவரசர்களையும் வதைத்து, அரசைக் கைப்பற்றியதையும் மகத மக்கள் வெறுத்து வந்தனர். ஆயினும் அவன் அவர்களைக் கடுமையாக அடக்கி

For more ebooks vist: http://getmyebook.in/

ஆண்டு வந்தான். அவனுக்குப் பின்னர், அவனுடைய மைந்தர்களான நவநந்தர்களில் மூத் தோனான **சுகற்பன்** அரியணை ஏறினான். அவன்

For more ebooks vist: http://getmyebook.in/



சந்திரகுப்தரும் சாணக்கியரும்

ாலத்தில்தான் சந்திரகுப்தர் நாடுகடந்து வெளி
யற நேர்ந்தது. அவர் மகதத்தின் தலைநகரான

சந்திரகுப்தரும் சாணக்கியரும்

காலத்தில் தான் சந்திரகுப்தர் நாடுகடந்து வெளியேற நேர்ந்தது. அவர் மகதத்தின் தலைநகரான பாடலியில் தங்கியிருந்தால், அவருடைய உயிருக்கே ஊறு நேர்ந்திருக்கும்.

நல்ல வேளையாக அவருக்குச் சாணக்கியருடைய உதவி கிடைத்தது. **சாணக்கியரை விஷ்ணுகுப்தர், கௌடில்யர்** என்றும் கூறுவதுண்டு. அவர் அந்தணர்; வேதங்களை அறிந்தவர்; கலைக் கடலைக் கரைகண்டவர்; ஆசையற்றவர்; பிடிவாதமும் கோபமும் மிக்கவர்; மதியால் விதியை வெல்பவர் என்றெல்லாம் புகழப் பெற்றவர். பொம்மைகள் போல் கொலுவீற்றிருந்த நவநந்தர்களை ஒழித்துக் கட்டி, மகதநாட்டை விடுவிக்கச் செய்யவேண்டும் என்று அவரும் உறுதி கொண்டிருந்தார். சந்திரகுப்தரோ

For more ebooks vist: http://getmyebook.in/

இயற்கையிலேயே அரசுரிமையுள்ளவர்; மகாவீரர். இருவரும் சேர்ந்து மகத இராச்சியத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டு வேலை செய்துகொண்டிருந்தனர். தட்சசீலத்தில் யவன வீரனான அலெக்சாந்தரைச் சந்தித்ததிலிருந்து, சந்திரகுப்தருக்குத் தாமும்அவனைப்போல வெற்றி வீரராக விளங்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. இராச்சியத்தைப் பிடித்துக்கொள்வதற்கு ஏற்ற காலத்தைக் கருதிக்கொண்டே இருந்தார் சாணக்கியர்.

அலெக்சாந்தர் கி. மு. 323 இல் பாபிலோனில் மரணமடைந்தபின், சந்திரகுப்தரும் சாணக்கியரும் பாஞ்சாலப் பகுதியில் நாடு நகரங்களை யெல்லாம் சுற்றி, எங்கும் தேசிய எழுச்சியைத் தோற்றுவித்தனர். மக்கள் அந்நியர் ஆட்சியைப் பூண்டோடு ஒழித்துவிட முன்வந்தனர். தட்ச சீலத்திலிருந்த யவனப் படை வெளியே துரத்தப்பட்டது. சந்திரகுப்தருக்குப் பல துணைவர்கள் சேர்ந்தார்கள். அவர் பெரிய படையைச் சேர்த்துக்கொண்டு மகத நாட்டிற் புகுந்து, நந்த வமிசத்தினரை அழித்து, பாடலிபுத்திரத்தைக் கைப்பற்றி விட்டார். அவர் மகத மன்னராக முடி சூட்டிக் கொண்டார். நந்தர்கள் சேர்த்துவைத்திருந்த செல்வங்களில் தங்கப் பணமாக மட்டும் 80 கோடி இருந்ததாம். ஒரு பணம் ரூபா 7 வீதம் இது ரூபா 560 கோடியாகும்.

அலெக்சாந்தருக்குப் பின்னர் அவனுடைய பழைய தளபதிகளில் ஒருவனான செலியூகஸ் ஆசியா மைனருக்கும் இந்தியாவுக்கும் இடையிலிருந்த நாடுகளை ஆண்டுவந்தான். தானே ‘உலகின்

For more ebooks vist: http://getmyebook.in/

சக்கரவர்த்தி’ என்று அவன் பட்டம் சூட்டிக் கொண்டிருந்தான். அவனை ‘நிகேடார்’ (வெற்றியாளன்) என்றும் சொல்வதுண்டு. அந்த வீரன் இந்தியாவின் வடபகுதியில் சிந்து நதியைத் தாண்டிப் படையெடுத்து வந்தான். சந்திரகுப்தர், 4,00,000 காலாட் படையினர், 20,000 குதிரை வீரர், 4,000 தேர்கள், 6,000 யானைகள் கொண்ட படையுடன், அவனை எதிர்த்துப் போரிட முன்வந்தார். செலியூகஸிடம் 1,50,000 வீரர்கள் இருந்தனர். தட்ச சீலத்தில் நடைபெற்ற போரில் யவனப் படையினர் கூட்டம் கூட்டமாக வதைக்கப்பட்டனர். சந்திரகுப்தரே வெற்றி பெற்றார்.

செலியூகஸ் அவருடன் சமாதானம் செய்து கொண்டான். தன் ஆட்சியிலிருந்த ஆப்கனிஸ்தானம், பலுசிஸ்தானம் முதலிய நான்கு நாடுகளை அவருக்கு அளித்து விட்டுத் திரும்பிச் செல்ல அவன் இசைவு தெரிவித்தான். அதன்படி கி. மு. 303 இல் தட்சசீலத்தில் உடன்படிக்கை நிறைவேற்றப் பெற்றது. சந்திரகுப்தர் செலியூகஸின் மகளையும் மணந்துகொண்டு, அவனுக்கு 500 யானைகளைப் பரிசாக அளித்தனுப்பினார். முன்னர் அலெக்சாந்தரின் தலைமையில் இந்தியாவுக்கு வந்து போரிட்ட தளபதிகளில் செலியூகஸ் ஒருவன். போரில் யானைகளின் வலிமையை அவன் நேரில் பார்த்தறிந்தவன். மேலும் அவனுக்கு அப்பொழுது யானைகளின் உதவி மிகவும் தேவையாயிருந்தது. ஆசியா மைனரிலும் சிரியாவிலும் ஆண்டுகொண்டிருந்த **ஆன்டி கோனஸைத்** தான்

For more ebooks vist: http://getmyebook.in/

எதிர்த்து விரட்ட அவை பயன்படும் என்று கருதி அவன் அவைகளைப் பெற்றுக்கொண்டு திரும்பினான்.

நாளடைவில் ஆப்கானிஸ்தானிலிருந்து வட இந்தியா முழுதும் சந்திரகுப்தர் வசமாயிற்று. தென் திசையில் **சேர, சோழ, பாண்டிய** இராச்சியங்களாக இருந்த **தமிழகம்** மட்டும் தனித்திருந்தது. கீழைக் கடற்கரையை ஒட்டி **மகாநதிக்கும் கோதாவரி** நதிக்கும் இடையிலிருந்த **கலிங்க** நாடு முன்னரே மகத மன்னனுக்கு அடங்கிக் கப்பம் கட்டி வந்து கொண்டிருந்தது. சந்திரகுப்தர், பாடலியைத் தாக்கு முன்னரே கலிங்க மன்னனுடன் ஒப்பந்தம் பேசி, உதவி பெற்றிருந்தார். அதன்படி அவர் மகதத்தைத் தாக்குகையில்,கலிங்க மன்னன் தன் படையுடன் சென்று, அவருக்கு உதவியாகத் தென் பக்கத்திலிருந்து போர் செய்தான். எனவே அவனும் அவர் ஆட்சியை ஏற்றுக் கொண்டிருந்தான். இவ்வாறு வரலாற்று முறையில் இந்திய நாட்டின் முதல் பேரரசராக அமர்ந்தவர் சந்திரகுப்தரே யாவர்.

தலைநகரான பாடலியில் இருந்துகொண்டு அந்தப் பேரரசை ஆள்வதற்குரிய திட்டங்களை அவரும் சாணக்கியரும் சேர்ந்து உருவாக்கி நிறைவேற்றினார்கள். பேரரசு நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பெற்று, மூன்று மாநிலங்கள் சக்கரவர்த்தியின் பிரதிநிதிகளால் ஆளப்பட்டு வந்தன. இந்தப் பிரதிநிதிகள் யாவரும் அரச வமிசத்தைச் சேர்ந்தவர்கள். மத்திய மாநிலம் பேரரசர் நேரிடையான ஆட்சியில் இருந்தது. வடமேற்கு மாநிலத்திற்குத் **தட்சசீல**நகரும், மேற்கு மாநிலத்திற்கு **உச்சயினி**

For more ebooks vist: http://getmyebook.in/

நகரும், தெற்கு மாநலத்திற்குக் **கிர்னார்** நகரும் தலைநகர்களாக விளங்கின. இமயம் முதல் தமிழகம் வரையிலும், மேலைக் கடலிலிருந்து கீழைக் கடல்வரையிலும் பரவியிருந்த அந்தப் பேரரசில் பாடலிபுத்திரத்திலிருந்து பேரரசரின் அனுப்பிய ஆணைகள் அனைத்தும் உடனுக்குடன் நிறைவேற்றி வைக்கப்பட்டன. இன்றியமையாத நிகழ்ச்சிகள் யாவும் எல்லா இடங்களிலிருந்தும் அவருக்குச் செய்திகளாக வந்து கொண்டேயிருந்தன. அரசாங்க அதிகாரிகள் அனைவரும், அச்சத்துடனும் பக்தியுடனும், தத்தம் கடமைகளை நிறைவேற்றி வந்தனர். நாடெங்கும் ஒற்றர்கள், மக்களும் அதிகாரிகளும் அவரவர் கடமைகளை நிறைவேற்றி வருவதுபற்றி உளவறிந்து தெரிவித்து வந்தனர். உட்பகைகள் ஒடுக்கப்பெற்றன. நால்வகைப் படைகளும் பெருக்கப்பட்டன.

நம் காலத்தில் பெரிய அரசாங்கம் ஒன்று செய்துவரக்கூடிய பணிகளில் பெரும்பாலானவை சந்திரகுப்தர் காலத்திலேயும் நடந்து வந்தன என்பது வியக்கத் தக்கதாம். பின்னர்ப் புகழோடு ஆண்ட பேரரசராகிய அக்பர் காலத்தில் இருந்ததைவிட அரசாங்கம் அப்பொழுது செம்மையாக இருந்தது என்று கூறப்பட்டிருக்கின்றது. பயிர்த்தொழிலுக்கு வேண்டிய வசதிகள் யாவும் செய்யப் பெற்றன. நிலங்களை அளந்து, தீர்வை விகிதங்கள் முறைப்படி தீர்மானிக்கப்பெற்றன. உணவுப் பொருள்கள், கடைகள், சந்தைகள், தொழிற்சாலைகள், மாட்டுப் பண்ணைகள், முதலியவைகளை யெல்லாம் அரசாங்கம் கண்காணித்து வந்தது. தானியங்களைக் குவித்துச்

For more ebooks vist: http://getmyebook.in/

சேர்த்து வைத்துக்கொண்டு கொள்ளை இலாபம் பெறுவதும், உணவுப் பொருள்களில் கலப்புச் செய்வதும் தடை செய்யப் பெற்றன. வாணிகப் பொருள்களுக்கு வரிகள் வாங்கப் பெற்றன. சுகாதாரத்தைக் கவனிக்கவும், மருத்துவ நிலையங்களை அமைத்து நடத்தவும் தனிப் பிரிவுகள் இருந்தன. திக்கற்றவர், விதவைகள், நோயாளர், தொழில் செய்ய முடியாத உடற்குறையுள்ளவர்கள் முதலியவர்களுக்கு அரசாங்கம் உதவிநிதி அளித்து வந்தது. எதிர்பாராத பஞ்சம், பற்றாக்குறை ஏற்பட்டால் மக்களுக்கு உதவி புரிவதற்காக அரசாங்கம் ஆங்காங்கே தானியங்களைக் கொள்முதல் செய்து சேர்த்துவைத்திருந்தது.

நாடெங்கும் பெரிய நகரங்களில் நகராட்சி மன்றங்கள் நிறுவப் பெற்றன. அவற்றை முறைப்படுத்தி கடத்துவதற்குரிய ஆணையாளர் நியமிக்கப் பெற்றிருந்தனர். துறைமுகங்களைக் கண்காணிக்கவும், கடல் வாணிகத்தைப் பெருக்கவும் வழிகோலப்பட்டது. தலைநகரான பாடலியுடன் பல இராச்சியங்களும் நெருங்கிய தொடர்பு கொள்ளவும், வாணிகம் பெருகவும், படைகளின் நடமாட்டத்திற்கு உதவவும் பெருஞ் சாலைகள் பல அமைக்கப்பெற்றன. இடையிடையே யாத்திரிகர்கள் தங்குவதற்குரிய விடுதிகளும் நிறுவப்பட்டன. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருந்ததால், ஆடம்பரப் பொருள்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. ஆடல், பாடல், நாடகங்கள் முதலியவைகளும் பெருகி வளர்ந்தன.

For more ebooks vist: http://getmyebook.in/

இத்தனை வெற்றிகளும் சந்திரகுப்தரின் இருபத்தைந்து ஆண்டு ஆட்சியில் ஏற்பட்டதைப் போன்ற நிகழ்ச்சியை வரலாற்றில் காண்பது அரிது. பேரரசுத் தேவதை மூடனிடம் நெடுநாள் தங்கியிராது; அது பயங்கொள்ளியைப் பார்த்ததும் பரிகசித்து நீங்கும்; வீரன் ஒருவனுக்கே அஃது அடங்கிக் கிடக்கும் என்பர். சந்திரகுப்தர் அத்தகைய வீரராயிருந்ததால், அவரிடம் பேரரசு நிலைத்து நின்றது. அத்துடன் அவருக்கு ஆலோசனை கூறி ஆட்சிபுரிய உதவிய அமைச்சர் நுண்ணறிவு, வன்மை, அன்பு ஆகியவைகளிலே சிறந்து விளங்கிய சாணக்கியர். அவர் இடம், பொருள், ஏவல் எல்லாவற்றையும் ஆராய்ந்து, தக்க சமயத்தில் தக்க உபாயம் கூறி வந்ததாலும், அதனை ஏற்றுச் சந்திரகுப்தர் நிறைவேற்றி வந்ததாலும், அவரது ஆட்சி மிக உயர்ந்த நிலையை அடைந்தது. சாணக்கியர் மன்னர் மன்னரான சந்திரகுப்தரின் முதல் அமைச்சராயிருந்த போதிலும், மிக்க எளிய வாழ்க்கையே வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. பண்டை நூல் ஒன்றில் அவர் குடியிருந்த வீட்டின் வருணனை காணப்படுகின்றது; இடிந்து போன சுவர்கள், மேலே உலர்வதற்காகப் போடப்பெற்றிருந்த பலாசங் குச்சிகளால் வளைந்து அழுந்திப் போன கூரை, உட்புறம் மாணவர்கள் சேர்த்து வைத்திருந்த தருப்பைக் கட்டுகள், உலர்ந்த காட்டுவரட்டிகளை உடைத்துத் தூளாக்க உதவும் ஒரு கல் துண்டு ஆகிய இவையே அவர் வீட்டில் காணப்பட்டன.

For more ebooks vist: http://getmyebook.in/

சாணக்கியர் பாடலியில் ஆண்டு வந்த நந்தர்களை ஒழிக்க வேண்டும் என்று சூள் உரைத்தார் என்றும், அது நிறைவேறும்வரை தம் சிகையை முடிப்பதில்லை என்று அவிழ்த்து வைத்திருந்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் சோழியராதலால் முன் குடுமி உள்ளவர். ஆகவே அவிழ்ந்து கிடந்த அக்குடுமி பார்ப்பவர்களுக்கெல்லாம் தெளிவாய்த் தெரியும். நந்தர்கள் அழிந்து, சந்திரகுப்தரின் ஆட்சி ஏற்பட்டதும், அவர், "சினமாகிய தீயின் புகைக் கொடி எனது சிகை! அது நந்த வமிசத்துக்குக் கரு நாகம்! நந்த முளைகளை எதிர்த்து நீறாக்கியது இந்தச் சினத் தீ! பூமியின் நோய்களைப் போன்ற நந்தர்கள் ஒன்பது பேர்களும் என்னால் வேரோடு களைந்து எறியப்பட்டார்கள். பொய்கையிலே நிலைத்து நிற்கும் தாமரைபோல், நரேந்திரராகிய சாணக்கியரிடத்திலே திருமகள் நிலைத்து நிற்கிறாள்!" என்று பெரு ஆனால் சுகற்பநந்தனிடம் அமைச்சராயிருந்த **சுபுத்தி சர்மன்** என்ற திறமைமிக்க அறிவாளியிடம் அவர் பகைமை பாராட்டாமல், அவரைச் சந்திர குப்தரின் அமைச்சரவையில் அமரச் செய்ய வேண்டுமென்று விரும்பினார். சுபுத்திக்கு **இராட்சசர்** என்றும் ஒரு பெயருண்டு. அவர், நந்தர்கள் அழிந்த பின்பும், அவர்களிடம் கொண்டிருந்த அன்பு மாறாமல், சந்திரகுப்தரை எதிர்த்து மறைவாக வேலைசெய்து கொண்டிருந்தார். அதைப் பற்றி அவ்வப்பொழுது தெரிந்துகொண்ட சாணக்கியர் அவர் திட்டங்களை யெல்லாம் தகர்த்து, அவரை இணங்க வைக்க ஏற்பாடு செய்தார். அதற்காக இராட்சசரின் உயிர் நண்பரான **சந்தன தாசர்** என்ற வைசியர் ஒருவரைப் பிடித்துத்

For more ebooks vist: http://getmyebook.in/

தூக்கில் போடப்போவதுபோல் அவர் பாவனை செய்தார். சாணக்கியரின் உட்கருத்தை அறியாத அந்த உத்தமர், உண்மையிலேயே தாம் தம் நண்பருக்காக உயிர்த்தியாகம் செய்யப் போவதாக எண்ணியிருந்தார். அப்பொழுது அவர் மைந்தன் வந்து கொலைக் களத்திலே அவரைக் கண்டு வணங்கினான். அவருடைய மரணத்திற்குப் பிறகு தான் என்ன செய்யவேண்டும் என்று வினவினான். சந்தன தாசர் வேறொன்றும் சொல்லவில்லை. “குழந்தாய்! நீ சாணக்கியன் இல்லாத ஒரு நாட்டிற்குச் சென்று வாழ வேண்டும்” என்று மட்டும் சொன்னாராம். பின்னர் இராட்சசரும் அங்கு வந்ததும், சாணக்கியர் அவரிடம் பேசி, சந்திரகுப்தரின் அமைச்சுப் பதவியை அவர் ஏற்றுக் கொள்ளும்படி செய்து, சந்தன தாசரை விடுதலை செய்யும்படி பணித்தார் என்பது கதை. சாணக்கியரின் மேலான நோக்கம் தெரிந்த பின்பு, சந்தனதாசர் தம் மகனிடம், சாணக்கியர் இல்லாத நாட்டிலே குடியிருக்க வேண்டா என்று சொல்லியிருப்பார். சாணக்கியரைப் பற்றிய இத்தகைய விவரங்களை ‘முத்ரா ராட்சசம்’ என்ற உயர்ந்த ஓர் அரசியல் நாடகமாக விசாகதத்தர் என்ற ஆசிரியர் வடமொழியில் இயற்றியுள்ளார். அது தமிழிலும் வெளிவந்துள்ளது.

ஐரோப்பாவுக்கே நாகரிகத்தை அளித்த யவன நாட்டிலே அலெக்சாந்தரின் குருவாக விளங்கிய அரிஸ்டாட்டில் என்ற அறிஞர் அந்தக் காலத்தில் அடிமைகளை வைத்துக்கொண்டு வேலை வாங்கும் முறைக்கு ஆதரவான வாதங்களைப் பற்றி

For more ebooks vist: http://getmyebook.in/

ஆலோசனை செய்து கொண்டிருந்தார். அதே சமயத்தில் இந்தியாவில் வாழ்ந்த அரசியல் மேதை சாணக்கியர், அடிமைகளை வைத்திருக்கும் முறை காட்டு மிராண்டிகளுக்கே ஏற்றது என்றும், நாகரிக மக்களிடம் அதை ஒழித்தே தீர வேண்டும் என்றும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அரசியல், பொருளாதார முறைகளைப் பற்றிய அவர் கருத்துக்களை யெல்லாம் அவரது 'அர்த்த சாத்திரம்' என்ற நூலிலே காணலாம். வாணிகம், தொழில்கள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், நகராட்சி, சமூகப் பழக்க வழக்கங்கள், திருமணம், விவாகரத்து, பெண்களின் உரிமைகள், சொத்துரிமைகள், சுரங்கங்கள், பயிர்த் தொழில், பாசன வசதிகள், கடற்போக்குவரத்து, மரக்கலன்கள், மக்கள் தொகையைக் கணக்கிடுதல் முதலிய பல பொருள்களைப் பற்றியும் அது விரிவாகக் கூறுகின்றது. 2,000 ஆண்டுகட்கு முன்னரே அத்தகைய நூல் ஒன்று இந்தியாவில் இயற்றப் பெற்றது பெருமைக்குரியது.

சந்திரகுப்தருக்குப் பின் அவர் மைந்தர் பிந்துசாரர் மோரிய வமிசத்து இரண்டாம் பேரரசராகக் கி. மு. 298 இல் அரியணை ஏறினார். அவருக்கும் சாணக்கியர் ஆலோசனை கூறிவந்தார். வரலாற்றில் அவரைப் பற்றி அதிகமான விவரமில்லை. ஆயினும் அவரும் வீரராக விளங்கினார் என்றும், பல போர்களில் வெற்றி பெற்று, பகைவரின் எமன் என்று பொருள்படும் 'அமித்ர காதா' என்ற பட்டம் பெற்றார் என்றும் தெரிகின்றது. தக்காணத்தில் **நெல்லூர்** வரை அவர்

For more ebooks vist: http://getmyebook.in/

வென்றிருக்க வேண்டும். ஏனெனில் அவருடைய மைந்தர் அசோகர் பட்டத்திற்கு வருகையில் அந்தப் பகுதியும் அவர் இராச்சியத்துடன் சேர்ந்திருந்தது.

பண்டைத் தமிழ் நூல்களில் மோரியர் தமிழகத்தின் மீதும் படையெடுத்ததாகக் கூறப்பெற்றுள்ளது.

> ‘கனைகுரல் இசைக்கும் விரைசெலல் கடுங்கணை
> முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
> தென் திசை மாதிரம் முன்னிய வரவிற்கு’

என்று **மாமூலனார்** பாடியுள்ளதிலிருந்து, மோரியர் வடுக மன்னருடைய படையின் உதவியுடன், தென்னார்க்காட்டிலுள்ள மோகூர் நகர்வரை வந்ததாகத் தெரிகிறது. முதலில் **மோகூர்** மன்னன் பணிய மறுத்த போதிலும், பின்னர் மோரியர் இரண்டு இலட்சம் வீரர் அடங்கிய பெரும்படையுடன் வந்து தாக்கியதாகவும், மன்னன் பொதிகை மலைப் பக்கம் சென்றதாகவும், மோரியப் படையும் அதுவரை சென்றதாகவும் குறிப்புக்கள் கிடைக்கின்றன. இந்தப் படையெடுப்பு சந்திரகுப்தர் காலத்தில் நடந்திருக்க முடியாது. வட இந்தியாவிலேயே அவர் தமது முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டியிருந்தது. மேலும் அவர் கலிங்க மன்னன் தமது ஆணையை ஏற்றால் போதும் என்று, அவனிடம் சமாதானமாகவே இருந்து வெற்றியடைந்தார். ஆந்திர மன்னரிடமும் தமிழக மன்னரிடமும் அமைதியாகவே அவர் நட்புக் கொண்டிருந்தார். பின்னர் அசோகர் காலத்திலும் தமிழகத்தின்மீது படையெடுப்பில்லை. ஆகவே பிந்துசாரர் காலத்திலேயே மோரியப் படை இந்தப்

For more ebooks vist: http://getmyebook.in/

பக்கம் வந்திருக்க வேண்டும். ஆனால் அப்படை வென்ற இடங்களைக் கைப்பற்றி வைத்துக் கொள்ளவில்லை என்று வரலாற்று ஆசிரியர் **வி. ஏ. ஸ்மித்** குறித்துள்ளார்.

சந்திரகுப்தர் காலத்தில் ஏற்பட்ட யவன நாட்டு உறவைப் பிந்துசாரர் தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்தார். யவனத் தூதரும், எகிப்திய மன்னன் **தாலமி** அனுப்பிய தூதரும் பாடலியில் தங்கினர். தந்தையார் அளித்த பேரரசை எல்லாத் துறைகளிலும் வலிமைப் படுத்தி, உறுதி பெறச் செய்தார் பிந்துசாரர்.

பிந்துசாரருக்குப் பின்னர் அவருடைய மைந்தர் அசோகர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஆனால், அரசுரிமை பற்றிய ஏதோ பூசல் காரணமாக, நான்கு ஆண்டுகள் காத்திருந்த பின்பே, அவர் முடிபுனைந்தார்.

For more ebooks vist: http://getmyebook.in/

# 4. பேரரசர் அசோகர்

பதினாயிரக் கணக்கான மன்னர்களின் பெயர்களிடையே, அசோகரின் பெயர், தனியாக, ஒரு தாரகை போல் ஒளி வீசுகின்றது என்றும், ருஷ்யாவிலுள்ள **வால்கா** நதியிலிருந்து ஜப்பான் நாடு வரையிலும் அவருடைய திருப்பெயர் இப்பொழுதும் பாராட்டப் பெறுகின்றது என்றும் உலக சரித்திர ஆசிரியரான **எச். ஜி. வெல்ஸ்** குறித்துள்ளார். வெற்றியடைந்த பின்னர்ப் போர் முறையைத் துறந்த அரசர் அசோகர் ஒருவரே என்றும் அவர் திருக்கிறார்.

பல வகையிலும் பெரும் புகழுக்கு உரியவரே அசோகர். ‘எல்லா மனிதர்களும் என்னுடைய குழந்தைகள்’ என்று அவர் ஒரு கல் தூணில் எழுதி வைத்திருக்கிறார். எழுத்தில் மட்டுமல்லாமல், வாழ்க்கையிலும் அவர் அவ்வாறே வாழ்ந்து காட்டினார். மக்களின் நலமே தம் நலம் என்றும், மக்களாகிய உயிரைத் தாங்கும் உடலைப் போன்றவரே மன்னர் என்றும் அவர் உணர்ந்திருந்தார். ஊன் கொழுத்து, உடல் பருத்து வாழ்வதே வாழ்க்கை என்றில்லாமல், மக்கள் ஒழுக்கத்திலும் சிறந்து, உன்னதமான இலட்சியப் பாதையில் உறுதியுடன் வாழ வேண்டும் என்றே பெற்றோர் எண்ணுவர். அங்ஙனமே அவரும் எண்ணியிருந்தார். ஒரு கல் வெட்டில், “தாழ்ந்தவர்களும் பெரியோர்களும் இடைவிடாது முயற்சி செய்க” என்று அவர் குறித்துள்ளார். வாழ்க்கையின் இலட்சியங்கள், வாழும் முறைகள் பற்றி

For more ebooks vist: http://getmyebook.in/

எல்லா மக்களுக்கும் அறிவு புகட்ட முன் வந்த முதல் அரசர் அவரே யாவார்.

மக்களுக்கு அசோகர் புகட்ட விரும்பிய அறநெறி சாதாரணமானதுதான். தாய் தந்தையரைப் பேணுதல், குருவைப் போற்றுதல், எல்லோரிடத்திலும், எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்பாயிருத்தல், பாவங்களுக்கு அஞ்சி ஒதுங்குதல், இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெற உழைத்தல் முதலிய அறங்களையே அவர் எடுத்துக் கூறியுள்ளார். இவை எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவை. ஆயினும் இவற்றில் இடைவிடாது முயற்சி செய்யவேண்டும் என்பது அவர் விருப்பம். அவர், ‘முயற்சி செய்க’ என்று எழுதியிருக்கும் இரு சொற்களும் பொருள் பொதிந்தவை. புத்தர் பெருமானின் அறவுரைகளில் நன்றாக ஊறியிருந்த அவருடைய உள்ளத்திலிருந்து வெளிவந்த சொற்கள் அவை.

புத்தர் மனமாசுகளை நீக்கி, நல்லெண்ணங்களை வளர்க்கச் சொன்னார். ‘நல்லதை விரைவாக நாட வேண்டும்; பாவத்திலிருந்து சித்தத்தை விலக்க வேண்டும். அறச்செயலைச் செய்வதில் தாமதித்தால், மனம் பாவத்தில் திளைக்க ஆரம்பித்துவிடும்’ என்பது அவர் திருவாக்கு. ‘மனத்துக்கண் மாசில’னாக ஆவதற்குரிய வழிகளையும் அவர் வகுத்துக் காட்டியுள்ளார். ஆனால் எந்த வழியானாலும் அதில் இடைவிடாத முயற்சி வேண்டும். இதனை அவர் வாழ்நாள் முழுதும் வற்புறுத்தி வந்தார். ‘கருத்துடைமையே நித்தியமான நிருவாண மோட்சத்திற்கு வழி; மடிமையே மரணத்திற்கு வழி,’

For more ebooks vist: http://getmyebook.in/

என்று அவர் தெரிவித்தார். இதை விளக்க ஓர் உதாரணம் கூறினார். ஆற்றின் மறுகரைக்குச் செல்ல விரும்பும் ஒருவன் இக்கரையிலேயே நின்றுகொண்டு, அக்கரையே, வா, வா!' என்று கூறினால், அது வருமா? அம்மட்டோடு நில்லாமல், அவன், இருந்த இடத்திலேயே போர்த்திப் படுத்துக்கொண்டு தூங்கத் தொடங்கினால், அவன் மறுகரையை அடைய முடியுமா? இதற்கும் மேலாகத் தன் கால்களையும் கைகளையும் தளைகளால் நன்றாகக் கட்டிக்கொண்டு துயின்றால், எந்தக் காலத்திலாவது அவன் அக்கரையை அடைய முடியுமா? அந்த மனிதனைப் போலவே மக்கள் முயற்சியில்லாமல் இருப்பதுடன், துன்ப விலங்குகளையும் மாட்டிக் கொள்கின்றனர் என்று அப்பெருமான் விளக்கிச் சொல்வ துண்டு. அவரது இறுதிக் காலத்தில் அவர் சீடர்களைப்பார்த்து, “நீங்கள் நல்ல கதியை அடைவதற்காக இடைவிடாமல் கருத்தோடு உழையுங்கள்!” என்று கூறினார். இவற்றை யெல்லாம் கருத்திலே கொண்டுதான் அசோகரும், இடைவிடாமல் முயற்சி செய்யும்படி, கால வெள்ளத்திலே அழியாத கல்லிலே பொறித்து வைத்தார்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நல்ல ஆட்சி புரிந்து, அல்லும் பகலும் மக்கள் நலனை நாடிவந்த அசோகர், தாம் விழிப்போடிருந்து வேலை செய்தது போதாது என்று மனக்குறை கொண்டிருந்தார். ஒரு கல்வெட்டில் அவரே பின் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்: “நான் விழிப்போடிருக்கும் வேளையிலோ, செய்து முடிக்கும் காரியத்திலோ

For more ebooks vist: http://getmyebook.in/

எனக்கு ஒருபோதும் அமைதி ஏற்படவில்லை. மக்களின் நலனுக்காக நான் சேவை செய்ய வேண்டும் என்றே கருதுகிறேன்; இது முற்றுப் பெறுதல் விழித்திருப்பதையும், முறைப்படி செயலாற்றுவதையும் பொறுத்திருக்கிறது. எல்லா மக்களும் நன்மை அடையும்படி பணியாற்றுவதைவிட எனக்கு வேறு வேலையில்லை." அசோகர் உள்ளக்கிடக்கை மேலே கூறியவற்றிலிருந்து தெளிவாகத் தெரியும். இத்தனைக்கும் அவர் பாரதப் பேரரசர்; பல்லாயிரம் போர் வீரர்கள் வில்லும் வாளும், ஈட்டியும், வல்லயமும், கேடயமும் தாங்கித் தொடர்ந்து வரவும் படைத் தலைவர்கள் அனைவரும் சேவித்துக் கட்டியம் கூறவும், மன்னர்கள் அடிபணியவும், மதயானையின் பிடரி மேல் வீற்றிருந்து ஆணை செலுத்திய அரசர் பிரான்!

அசோகரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் மிகச் சுருக்கமாகவே கிடைத்துள்ளன; ஆனால், புராணக் கதைகளே அதிகம். அவரைப் பற்றியும், அவர் தந்தையார், பாட்டனார் பற்றியும் யவனத் தூதர்களும், வரலாற்று ஆசிரியர்களும் கூறும் செய்திகளிலிருந்து நாம் அவர்களைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்ள முடிகின்றது. நீண்ட காலம் செங்கோல் ஓச்சிய அசோகரைப் பற்றிச் சென்ற நூற்றாண்டில்கூட விரிவாகத் தெரிந்து கொள்ள வழியில்லாமலிருந்தது. ஆனால், பின்னர், அவரே எழுதிவைத்த கல் தூண்களும், பாறைகளும் நாடெங்கும் கண்டு பிடிக்கப் பெற்றதால், அவர் ஆட்சியின் பிற்பகுதியைப் பற்றி விரிவாக அறிய முடிந்தது. கல்வெட்டுக்களைக் கண்ட பின்பும், அவற்றில் பொறித்திருந்த செய்திகளையும்

For more ebooks vist: http://getmyebook.in/

புரிந்துகொள்ள நெடுநாளாயிற்று. கல்வெட்டுக்களில் அசோகர் தமது இயற்பெயரான 'அசோக வர்த்தனர்' என்று பொறிக்கவில்லை; 'தேவர் களுக்கு உகந்தவர், பார்வைக்கு இனியவர்' என்று பொருள்படும் 'தேவானாம்பிரிய பிரியதரிசி' என்றே குறித்துள்ளார். பாரசீகப் பெரு மன்னர் தரியஸ் எழுதிவைத்த கல்வெட்டு ஒன்றில் தாமே தமக்குக் கட்டியம் கூறிக்கொள்வது போல, 'இராசாதி ராசர், (அரசர்க்கரசர்) இராச்சியங்களின் அதிபதி' என்றும், இன்னார் குமாரரும், இன்னார் பேரருமான மாபெரும் மன்னர் தரியஸ் என்றும் குறித்திருக்கிறார். ஆனால், அசோகரோ பெரும்பாலும் தம் பெயரைக்கூடக் குறிப்பிடவில்லை. 'சக்கரவர்த்தி' என்ற சொல்லே அவர் கல்வெட்டுக்களில் காணப்பெறவில்லை. இதிலிருந்து அசோகருடைய அடக்கமும் பண்பும் தெளிவாய்த் தெரிகின்றன.

கதைகள், கல்வெட்டுக்களின் துணை கொண்டு பார்த்தால், அசோகர் பிந்துசாரரின் இராணிகளில் **சுபத்திராங்கி** என்ற மகாராணியின் மைந்தர் என்றும், வேறு ஓர் இராணியின் மைந்தரான **சுமணர்** என்பவரே பட்டத்திற்குரிய மூத்தவர் என்றும், **திஷ்யன்** என்று அசோகருக்கு ஒரு தம்பி இருந்தான் என்றும் தெரிகின்றது. அசோகருடைய மனைவியர் **தேவி** (வேதிஸ மகாதேவி சாக்கிய குமாரி), **காருவாகீ, அசந்தமித்திரை, பத்மாவதி, திஷ்யரட்சிதை** என்போர். இவர்களில் தேவிக்கு **மகேந்திர**னும், காருவாகீக்குத் **திவார**னும், பத்மாவதிக்குக் **குணாள**னும் மைந்தர்கள். **ஜலௌகா** என்று ஒரு குமாரனும் அசோகருக்கு

For more ebooks vist: http://getmyebook.in/

இருந்ததாகக் காஷ்மீர் வரலாறு கூறும். தேவிக்குச் **சங்கமித்திரை, சாருமதி** என்ற இரு பெண்களும் இருந்தனர். சங்கமித்திரை **அக்னிப்பிரம**னையும், சாருமதி **தேவ பால க்ஷத்திரிய**னையும் பின்னர் மணந்துகொண்டனர். **தசரதன், சம்பிரதி, சுமணன்** ஆகியோர் அசோகருடைய பெயரர்கள். இவர்களில் சுமணன் சங்கமித்திரையின் மகன்; சம்பிரதி குணாளனுடைய மைந்தன்; தசரதனே பின்னர் மன்னனாயிருந்தவன்.

அசோகர் கி. மு. 274 இல் அரியணை ஏறினார். அவர் சிறுவயதிலிருந்தே அரசர்க்குத் தேவையான கல்வியிலும் கலைகளிலும் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். 18 ஆண்டுக் காலம் பயிற்சி முடிந்த பிறகு, அவர் சிறந்த போர்வீரராக விளங்கினார். அப்பொழுது பஞ்சாப், காஷ்மீரம் முதலியவை உள்ளிட்ட வடமேற்கு மாநிலத்தின் தலைநகரான தட்சசீலத்தில் சுசீமர் அரசப் பிரதிநிதியாயிருந்தார். அங்கு அரசாங்க அதிகாரிகளின் சில கொடுமைகளை எதிர்த்து மக்கள் கலகம் செய்தனர். சுசீமரால் கலகத்தை அடக்க முடியாததால், பிந்துசாரர் ஒரு படையுடன் அசோகரை அங்கே அனுப்பிவைத்தார். அசோகர் கலகத்தை எளிதில் அடக்கி, மக்களின் குறைகளை விசாரித்துப் பரிகாரம் கண்டார். பின்பு அவரே அங்குச் சிறிது காலம் அரசப்பிரதிநிதியாக இருந்து ஆட்சி புரிந்தார். இளம் வயதில் தட்சசீல வாழ்க்கை அவருக்கு மிகவும் பயன்பட்டிருக்க வேண்டும்.

கல்வி கேள்விகளுக்குப் புகழ் பெற்ற இடம் தட்சசீலம். மேலும் மேற்குப் பக்கத்து நாடுகளுடன்

For more ebooks vist: http://getmyebook.in/

தொடர்பு கொள்ள அதுவே தலைவாயிலாகவும் விளங்கிற்று. அங்கிருந்த பல்கலைக் கழகம் ஆசியா முழுதும் புகழ்பெற்றது. மோரியர் ஆட்சியில் தட்சசீலம் மிகப் பெரிய வாணிகத் தலமாகவும் விளங்கி வந்தது. மோரியருக்கு முன்னர் அது சுதந்தர நாடாயிருந்ததால், மக்கள் புதிய ஆட்சியில் மனக் குறை கொள்வது இயல்பாகும். அத்தகைய குறைக்கு இடமில்லாமல், அசோகர், வெறும் படையை மட்டும் நம்பியிராமல், மக்களை அன்புடன் அரவணைத்துக் கொண்டார்.

பின்னர் அவர் மேற்கு மாநிலமான **மாளவ** இராச்சியத்தின் தலைநகரான உச்சயினியில் அரசப் பிரதிநிதியாக இருந்தார். அந்நகரும் வாணிகத்தில் செல்வம் கொழிக்கும் நகராகத் திகழ்ந்தது. அங்கேயிருந்த காலத்தில், அசோகர் தேவி என்ற வைசியப் பெண்ணைக் காதலித்து, அவளை மனைவியாக ஏற்றுக் கொண்டார். தேவியின் குழந்தைகளே மகேந்திரனும் சங்கமித்திரையும். தேவி பௌத்த தருமத்தில் மிகுந்த பற்றுடையவள். அவளது முயற்சியாலேயே அசோகர் புத்த தருமத்தைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொள்ளவும், அதைப் போற்றிப் பின்பற்றவும் முடிந்தது என்று கருத இடமுண்டு.

அசோகருக்கு இரண்டு நூற்றாண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர் **கௌதம புத்தர்**. அவரும், அசோகரைப் போல, கபிலவாஸ்துவில் ஆண்டு வநத **சுத்தோதன** மன்னரின் மைந்தரான இளவரசர். உலகில் மக்கள் படும் அவதிகளைக் கண்டு, பிறப்பு, மூப்பு, பிணி, சாக்காடு முதலியவற்றின் காரணத்தை அறிந்து, பிறவாப் பெருநிலையை அடையும் ஞானத்தைப் பெற

For more ebooks vist: http://getmyebook.in/

வேண்டும் என்று அவர், நாடு துறந்து, காட்டிலே ஆறு ஆண்டுகள் அருந்தவம் செய்தார். பின்னரே அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. அது முதல் அவர், தமது எண்பது வயதுவரை, பல இடங்களுக்கும் கடந்து சென்று தருமப் பிரசாரம் செய்து வந்தார். காணும் துன்பங்கள்,அத்துன்பங்களிலே பெருந் துன்பமாகிய மரணம் ஆகியவை தொலையவேண்டுமானல், பிறப்பே தொலைய வழி காணவேண்டும் என்றும், பற்றற்ற வாழ்க்கையே முடிவிலாப் பேரின்பமாகிய நிருவாணத்தை அளிக்கும் என்றும் பற்று விடுவதற்கும், ஒழுக்கமாக வாழ்வதற்கும் எட்டுப் படிகளாக அமைந்த 'அஷ்டாங்க மார்க்கம்' தக்க வழி என்றும் அவர் மக்களுக்கு உபதேசம் செய்து வந்தார். அப்பொழுது மகதத்தை ஆண்டு வந்த மன்னர் **பிம்பிசாரர்**, பௌத்த தருமத்தை மேற்கொண்டு, பெருமானுக்கு வேண்டும் உதவிகளைச் செய்து வந்தார். மகத நாட்டில் புத்தரைப் பின்பற்றிய துறவிகளான பௌத்த பிக்குக்களுக்குப் பல விகாரங்களும், ஆராமங்களும் அமைந்திருந்தன. நாள்தோறும் ஆயிரம் ஆயிரமாக மக்கள் பௌத்த தருமத்தை ஏற்றுக் கொண்டனர். புத்தரைப் போல, அவர் காலத்திலேயே தோன்றிய மாவீரரும், அவருடைய அடியார்களாகிய சைனத் துறவிகளும் தங்களது சமண சமயத்தைப் பரப்பி வந்தனர். வேதங்களை ஆதாரமாய்க் கொண்டு யாகங்கள் முதலியவை இயற்றுவதை இச்சமயங்கள் கண்டித்தன. இவை பழைய வைதிக இந்து தர்மத்திற்கு எதிராக விளங்கியதால், இந்து சமயத்தாரும் இவற்றைச் சமாளிப்பதற்காக எதிர்ப்பிரசாரம் செய்து வந்தனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

இவ்வாறு அக்காலத்தில் வட இந்தியா முழுதும் சமய ஆராய்ச்சிகளும், பிரசாரங்களும், வாதங்களும் நிறைந்திருந்தன.

அசோகர் காலத்திலும் சமண, பௌத்தப் பிரசாரங்கள் தீவிரமாக நடந்து வந்தன. ஆயினும் அப்பொழுது அவை சில சில பகுதிகளிலேயே உரம் பெற்று வந்தன. அவை பின்னால் இமயம் முதல் குமரிவரை பரவிப் பல்கிப் பெருகி வந்ததையும், அவற்றின் சிறந்த பண்புகளை இந்து சமயமே ஏற்றுக் கொண்டதையும் சரித்திரத்திலே காண்கிறோம்.

அசோகர் அரியணை ஏறிய பின் 13 ஆண்டுக்காலம் தம் தந்தையைப் போலவும், பாட்டனார் சந்திரகுப்தரைப் போலவும் முறையாக ஆண்டு வந்தார். நல்ல வேளையாக அவருக்குப் பேரரசை அமைக்கும் பொறுப்பு இல்லை; அதை முந்தியவர்களே செம்மையாகச் செய்து முடித்துவிட்டார்கள். ஆயினும், தெற்கே இருந்த தமிழகமும், கீழைக்கடற்கரையில் கோதாவரி ஆற்றுக்கும் மகாநதிக்கும் இடையிலிருந்த காடுகள் அடர்ந்த கலிங்கமும் மகத சாம்ராச்சியத்திற்கு வெளியிலிருந்தன. தெற்கே இருந்த சோழ, பாண்டியர்களுடன் அசோகர் நெருங்கிய அன்புத் தொடர்பு கொண்டிருந்தார் என்பது அவருடைய கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. ஆனால், கலிங்கம், ஒரு பக்கத்தில் கடல் இருந்த போதிலும், மற்றைப் பக்கங்களிலெல்லாம் மகதப் பேரரசை ஒட்டியிருந்தது பிந்து சாரருக்குப் பின்னர்க் கலிங்க மன்னர் பேரரசுத் தொடர்பையே முழுதும் அறுத்துக் கொண்டிருக்கவும் கூடும். எனவே அசோகர்

For more ebooks vist: http://getmyebook.in/

பெரும்படையுடன் கலிங்கத்தை வெல்வதற்காகப் படையெடுத்துச் செல்ல நேர்ந்தது. இப்போரே அவரது கன்னிப் போராகவும் அவரது இறுதிப் போராகவும் விளங்கியது.

இப்பொழுது ஒரிஸா என்று அழைக்கப்பெறும் கலிங்கம் கடலரண், மலையரண், கானரண் ஆகியவற்றைப் பெற்றது. கலிங்க மக்களும், மன்னரும் பெரும் வீரர்களாக இருந்தனர். அவர்கள் 'வேலாலும் வில்லாலும் வேலி கோலி' நின்ற அரணே அந்நாட்டின் நான்காவது அரணாக விளங்கியது. அவர்கள் வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் நடுவில் இருந்ததால் தொன்று தொட்டே அவர்கள் இருபுறத்திலிருந்தும் தாக்குதல்களுக்கு உட்பட்டிருந்தனர். சில சமயங்களில் அவர்களும் படையெடுத்துச் சென்று தாக்கியிருக்கின்றனர். சந்திரகுப்தருக்கு முன், அவருடைய பாட்டனார் **மௌரியர்** மகத இராச்சியத்தில் நந்தர்களிடம் படைத் தலைவராய் இருந்த சமயம், அவர் கலிங்கத்தைத் தாக்கி வென்றார். பின்னர் அமைதி நிலவியிருந்தது. அளவிடற்கரிய பெரிய படைகளுடன், அவற்றிற்கு வேலையேயில்லாமல், பாடலிபுத்திரத்தில் அசோகர் வாளா அமர்ந்திருக்க முடியவில்லை. வாய்ப்புக் கிடைத்ததும், கி. மு. 262 இல் அவர் கலிங்கத்தைத் தாக்கி வென்றார். அவருக்குப் பின் கலிங்க மன்னர் காரவேலர் கி. மு. 162 இல் மகதத்தின்மீது படையெடுத்து வென்றதாகவும் சரித்திரம் கூறும். ஆகவே இருபக்கத்தாரிடையிலும் படையெடுப்பு அக்கால வழக்கப்படி நடந்து வந்துள்ளது. சுருங்கச் சொன்னால்,

For more ebooks vist: http://getmyebook.in/

கலிங்கத்தின் வீரமே அதன்மீது பிறர் பன்முறை படையெடுத்து வரக் காரணமாயிருந்தது எனலாம். ஒவ்வொரு போரிலும், கலிங்கர் மிடுக்குடன் எதிர்த்து நின்று வீரப்போர் புரிந்திருக்கின்றனர். எத்தனை முறை தோல்வி கண்டாலும், சூழ்நிலை மாறியவுடன், அவர்கள் மீண்டும் நிமிர்ந்து நின்று விடுதலை பெற்று வந்தனர்.

அசோகரிடம் எப்பொழுதுமே நாற்படைகளையும் சேர்த்து ஆறு இலட்சத்திற்குக் குறையாத போர் வீரர்கள் இருந்து வந்தனர். அவர்களிலே பெரும் படையைத் திரட்டிக் கொண்டு, அவர் கலிங்கத்தின்மீது படையெடுத்து வந்தார். கலிங்கம் வட கலிங்கம், தென் கலிங்கம், நடுக் கலிங்கம் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது. தமிழ் நூல்கள் ஏழு கலிங்கம்' என்று ஏழு பிரிவுகளைக் கொண்டதாகவும் கூறும். அக்காலத்தில் கலிங்க மன்னனிடம் 60,000 காலாட்படையும், 1,000 பேர்களைக் கொண்ட குதிரைப் படையும், 700 பேர்களைக் கொண்ட களிற்றுப் படையும் நிரந்தரமாக இருந்து வந்தன. ஆனால், போர்க் காலத்தில் இவை பன்மடங்கு அதிகரித்திருக்க வேண்டும். மகதப்பேரரசரே படையெடுத்து வந்து முற்றுகையிட்ட போதிலும், கலிங்க மன்னன் கலங்காது எதிர்த்து நின்றான்.

நீண்ட காலம் முற்றுகையும் போர்களும் நடந்த பின், கலிங்கத்திலே பட்டினியும் பஞ்சமும் பெருகிவிட்டன; களங்களிலே மோரியப் படையால் கலிங்கர்களில் இலட்சம் வீரர்கள் வதைக்கப்பட்டனர். ஒன்றரை லட்சம் பேர்கள் சிறைப் பிடிக்கப் பட்டனர் என்று அசோகரின்

For more ebooks vist: http://getmyebook.in/

கல்வெட்டுக்களிலிருந்து தெரிகின்றது. போரினால் மக்களிலே எத்தனை இலட்சம் பேர்கள் வீடிழந்து, நிலமிழந்து, உற்றார் உறவினரை இழந்து தவித்திருப்பார்கள் என்பதை நாமே சிந்தித்துக் கொள்ளலாம். மேலும் மோரியப்படையினர், நாட்டைத் தீ வைத்து எரிக்காவிட்டாலும், மறையவர், பெண்டிர், முதியோர், குழந்தைகள் என்றுகூடப் பாராமல் வதைத்துவிட்டனர்.

பண்டைக்காலப் போர்களிலே ‘சேனை தழை யாக்கி, செங்குருதி நீர் தேக்கி, ஆனை மிதித்த அருஞ்சேறு’ நிறைந்திருக்கும் என்பதை நாம் நூல்களிலே காண்கிறோம். எனினும் தமிழ் மன்னர் படையெடுத்துச் செல்லுகையில், பசுக்கள், அந்தணர், பெண்கள், பிணியாளர் முதலியோரைப் போர் நிகழும் இடத்திலிருந்து வெளியேறிவிடும்படி எச்சரிக்கை செய்த பிறகே போரிடுவர். போர்க் களத்திலும் படை வீரர் அல்லாதார்மீதும், பயந்து ஓடுவார்மீதும், காயமடைந்தார் மீதும், முதியோர் இளைஞர்மீதும், ஆயுதங்களை அவர்கள் செலுத்துவதில்லை. ஆயினும், வெற்றிகொண்ட நகரங்களைத் தீக்கிரையாக்குதல் அவர்தம் வழக்கமாயிருந்தது. அழித்த ஊர்களில் கழுதை பூட்டிய ஏர்களால் உழுது, எள்ளும் கொள்ளும் விதைத்தலும் உண்டு. பகைவரின் நாட்டைச் சுட்டெரிக்கும் நெருப்புப் புகையினால் மன்னன் அணிந்த மலர் மாலை வாடவேண்டும் என்று கவிஞர் வாழ்த்துவது உண்டு.

அசோகரின் கலிங்கப் போர், ஏறக்குறைய 1400 ஆண்டுகளுக்குப் பின் முதற் **குலோத்துங்க சோழர்**

For more ebooks vist: http://getmyebook.in/

வட கலிங்கத்தின்மீது படையெடுத்ததை நினைவூட்டும். முந்திய போரைப் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், பிந்தியதைப் பற்றிக் ‘கலிங்கத்துப் பரணி’ என்ற தெவிட்டாத செந்தமிழ் நூலே இருக்கின்றது. கி. பி. 1096 இல் குலோத்துங்கர் கலிங்கத்தின்மீது முதன் முதலில் படையெடுத்து வென்றார். பதினாறு ஆண்டுகட்குப் பின் அவருடைய படைத் தலைவனான **கருணாகரத் தொண்டைமான்** பெரும்படையுடன் சென்று, கலிங்கத்தை வென்று, கலிங்க மன்னன் **அனந்த வன்மனைச்** சிறை செய்துகொண்டு, காஞ்சி மாநகருக்குத் திரும்பினான். இந்தப் போரைப் பற்றி உரைப்பவர்க்கு ‘நாவாயிரமும், கேட்பவர்க்கு நாளாயிரமும் வேண்டும்’ என்று கலிங்கத்துப் பரணி கூறுகின்றது.

மலைகளெல்லாம் யானைகளாகத் திரண்டு வந்ததுபோல் மதயானைகள் இடிபோலப் பிளிறுகின்றன. முகில்கள் அனைத்தும் தேர்களாக வந்து குழுமியது போல் இருக்கின்றன. வீரர்கள், போர் வெறி கொண்டு ‘உடல் நமக்கு ஒரு சுமை’ என்றும், ‘உயிரை விற்றுப் புகழ்கொள்ள வேண்டும்’ என்றும் போராடுகிறார்கள். தரையிலும் வானத்திலும் ஒரே தூளிப் படலமாயிருக்கின்றது. வளைந்த விற்கள் இடிபோல் முழங்குகின்றன; அவற்றிலிருந்து நெடுமழை போல் கூரிய அம்புகள் பாய்ந்து கொண்டே இருக்கின்றன.

‘இடிகின்றன மதில்
எரிகின்றன பதி

For more ebooks vist: http://getmyebook.in/

எழுகின்றன புகை
வளைகின்றன படை’

போர் முடிவிலே களங்களிலே காணக் கூடிய காட்சிதான் என்ன! இரத்த ஆற்றில் உடைந்த தேர்களின் வெண் குடைகள் நுரையைப் போல மிதந்து கொண்டிருந்தன. இறந்து வீழ்ந்த யானைகள் அந்த ஆறுகளுக்குக் கரைகளாகக் கிடந்தன. உறுப்பிழந்த போர் வீரர்கள் ஆயிரம் ஆயிரமாகச் சிதறிக் கிடந்தார்கள்.

இப்படிப்பட்ட காட்சியையே அசோகரும் கண்டார். சாலைகளிலும் தனிப் பாதைகளிலும், உணவு, உடை, உறையுள் எல்லாம் இழந்து, கண்ணீரும் கம்பலையுமாக, இலட்சக் கணக்கான அகதிகள் திரிவதைப் பார்த்தார். இரும்பு போன்ற உறுதியுள்ள அவர் உள்ளம் மெழுகுபோல உருகத் தொடங்கிவிட்டது. வீடு, வாசல், குடும்பம், குழந்தை, உறவினர்களுடன் அமைதியாக வாழ்ந்து

For more ebooks vist: http://getmyebook.in/



அசோகரின் மனமாற்றம்

கொண்டிருந்த கலிங்க மக்களுக்கு அத்துணை அவதிகள் ஏற்படக் காரணம் என்ன? போர்தான் காரணம். அதனை உணர்ந்து கொண்டதும், அசோகர் மேற்கொண்டு போர் செய்வதே இல்லை என்று உறுதி செய்துகொண்டார். பக்கத்து நாடுகளை வென்றுவென்று தமது பேரரசை

For more ebooks vist: http://getmyebook.in/

வலிமைப்படுத்தவேண்டும் என்று கருதி வந்த பேரரசராகிய அசோக மோரியர் மறைந்து, அருள் மிகுந்த அசோகர் என்ற மனிதர் தோன்றிவிட்டார். கலிங்கத்திலே புரிந்த கன்னிப் போரே தமது கடைசிப் போர் என்று அவர் மக்களுக்கும் வீரர்களுக்கும் அறிவித்தார். முதன்முதலில் உலகிலே ஆயுத ஒழிப்புப் பற்றி முடிவு செய்து, அதை நிறைவேற்றிய மன்னர் அவரே. வையகத்தை இரத்த ஆறுகளும், நிணங்களும், பிணங்களும் நிறைந்த மயானமாகச் செய்வதை விடுத்து, அதை அன்பும் அருளும் நிறைந்த பசுஞ் சோலையாகச் செய்யவேண்டும் என்று அவர் தீர்மானித்தார். அருளுடைய மன்னர்கள் எத்தனையோ பேர்களை உலகம் கண்டிருக்கிறது; ஆனால், இலட்சக் கணக்கான உயிர்களைப் பலிவாங்கி அரிதில் வெற்றி பெற்ற களத்திலேயே போரையும் வெற்றியையும் ஒருங்கே துறந்த பெரியவர் அசோகர் ஒருவரே. தாம் பெற்ற வெற்றி தரும வெற்றி அன்று; அசுர வெற்றி என்று கண்டதும், கொதிக்கின்ற சட்டியைத் தொட்டதும் கைகள் விட்டுவிடுவதுபோல, அவர் அதைத் துறந்து விட்டார்.

கலிங்கப் போரில் தமக்கு ஏற்பட்ட ஆறாத்துயரையும், மன வேதனையையும் அசோகர் பாறைருக்கிறார். ' அந்தச் சாசனம் சோகம் நிறைந்த அவரது உணர்ச்சித் துடிப்புடன் விளங்குகின்றது. அது கால வெள்ளத்தைக் கடந்து ஒரு மனிதரது ஆன்மாவின் ஓலத்தை இன்னும் தாங்கி நிற்கின்றது' என்று ஆசிரியர் ஸ்மித் போற்றியுள்ளார்.

For more ebooks vist: http://getmyebook.in/

**கலிங்க** நாட்டில் **தோசலி, சமாபா** என்ற இரண்டு இடங்களில் அசோகர் இரண்டு பாறைக் கல்வெட்டுக்களுக்கு ஏற்பாடு செய்தார். அவற்றிலே தம் நிருவாக அதிகாரிகளாகிய மகாமாத்திரர்களும், நகரச் செய்திகளைக் கவனிக்கும் நீதிபதிகளும் கவனிக்க வேண்டிய இன்றியமையாத செய்திகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவர்களிடம் பல்லாயிரம் உயிர்கள் ஒப்படைக்கப் பெற்றிருந்ததை நினைவுறுத்தி அவர்கள் நல்ல மனிதர்களுடைய அன்பைப் பெறவேண்டும் என்றும், மக்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய எல்லா வசதிகளும் கிடைக்கும்படி செய்யப்பட வேண்டும் என்றும் அசோகர் கூறியிருந்தார். அதிகாரிகள் பொறாமை, முயற்சியின்மை, கடுமை, பரபரப்பு, பழக்கமின்மை, சோம்பல், தளர்ச்சியின்றி நேர்மையான வழியில் உறுதியுடன், இடைவிடாமல், ஊக்கத்துடன் சென்று கொண்டிருக்க வேண்டியதன் தேவையை அவர் நன்கு வற்புறுத்தியிருந்தார். எல்லைப்புறங்களிலுள்ள மக்களுக்கு அவர் அறிவிக்க விரும்பிய செய்தி, 'அவர்கள் என்னிடம் பயம் கொள்ள வேண்டியதில்லை. என்னிடமிருந்து துன்பத்திற்குப் பதிலாக அவர்கள் இன்பத்தையே பெறுவார்கள் என்று நம்பும்படி செய்யவேண்டும்,' என்பதே ஆகும்.

For more ebooks vist: http://getmyebook.in/

# 5. பேரரசரின் சின்னங்கள்

**கலிங்க** வெற்றிக்குப் பின்னர் அசோகர் முப்பது ஆண்டுகள் வாழ்ந்து ஆட்சி புரிந்து வந்தார். பௌத்த தருமத்தில் அவருக்கு இருந்த ஈடுபாட்டினால் அத்தருமத்தை வழங்கிய புத்தர் பெருமானிடத்தும் அவர் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். உபகுப்தர் என்ற பௌத்த குருவுடன் அவர் புத்தர் வாழ்ந்த பல தலங்களுக்கும் யாத்திரை சென்றார். பெருமான் அவதரித்த தலமாகிய உலும்பினியில் 'இங்கேதான் பகவான் அவதரித்தார்' என்று உபகுப்தர் கூறக் கேட்டு, அசோகர் அங்கே ஒரு கல் தூணை நட்டு, அதிலே தாம் அங்கு யாத்திரை சென்ற செய்தியைப் பொறித்து வைத்ததுடன், உலும்பினியும், அதைச் சுற்றியிருந்த கிராமங்களும் தீர்வை செலுத்த வேண்டியதில்லை என்றும் அறிவித்தார். புத்தர் ஞானமடைந்த புத்தகயையில் அவர் ஓர் அழகிய கோயிலை அமைத்தார். புத்தர் வாழ்ந்த கபிலவாஸ்துவிலும், அவர் பொன் உடலை நீத்த குசீநகரிலும், மற்றும் அவர் வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட இடங்களிலும் அவர் பல திருப்பணிகள் செய்து, விகாரங்கள் அமைத்து அளவிடற்கரிய தான தருமங்களையும் செய்தார்.

அசோகர் அமைத்த விகாரங்கள் எண்ணற்றவை. அவை பின்னால் அழிந்து போய்விட்டன. ஆனால், அவர் நிறுவிய அழகிய வட்ட வடிவமான தூண்களிலே சில இன்னும் இருக்கின்றன. அவர் 84,000 தூண்களைக் கட்டியதாக 'அசோகாவதானம்' என்ற நூல் கூறுகின்றது.

For more ebooks vist: http://getmyebook.in/

நாட்டின் பல பகுதிகளிலே அவர் தூண்களை நிறுவினார் என்பதை அந்நூல் மிகைப்படுத்திக் கூறியிருக்கலாம்.

அசோகர் அமைத்த தூண்களிலே மிகவும் புகழ்பெற்றது போபால் இராச்சியத்திலுள்ள **சாஞ்சித்** தூண். இது குன்றின் மேல் அமைந்தது. சிவப்புக் கற்களால் கட்டப் பெற்றுள்ள இதன் உயரம் 23 மீட்டர்; அடிப்பாகத்தில் இதன் சுற்றளவு 36 மீட்டர். சுற்றிலும் கற்களால் அமைந்த காப்புச்சுவர் உண்டு. அதில் 10 மீட்டர் உயரமுள்ள வாயில்கள் அமைந்துள்ளன. வாயில்களின் மேலே பலவித அலங்காரமான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

சாஞ்சியிலுள்ள பழைய கம்பத்தின் அருகில் 1952 இல் இந்திய மகாபோதி சங்கத்தார் புதிதாக ஒரு விகாரம் அமைத்துள்ளனர். புத்தர் பெருமானின் முதன்மைச் சீடர்களாகிய சாரீபுத்திரர், மௌத்கல்யாயனர் ஆகிய இருவருடைய அஸ்திகளும் அங்கே அடக்கம் செய்யப்பெற்றுள்ளன.

அசோகர் இரு பெரு நகரங்களை ஏற்படுத்தியதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவை காஷ்மீரத்தின் தலைநகரான **ஸ்ரீநக**ரும், நேபாளத்திலுள்ள **தேவபட்டண**மும் ஆகும். தேவபட்டணத்திற்கு அசோகர் சென்றிருக்கையில், அவருடைய மகள் சாருமதியும் அவள் கணவன் தேவபாலனும் அவருடன் இருந்தனர். பின்னர் அவ்விருவரும் அங்கேயே தங்கிவிட்டனர். அங்கே அசோகர் அமைத்த நான்கு பழைய தூண்கள் உள்ளன.

For more ebooks vist: http://getmyebook.in/

தலைநகரான பாடலிபுரத்தில் அசோகர் கற்களால் புதிய அரண்மனை ஒன்றை அமைத்திருந்தார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்திருந்த சீன யாத்திரிகர் பாஹியான் கற்களையெல்லாம் தேவதைகளே அடுக்கி வைத்து, சுவர்கள் எழுப்பி, சிற்பங்கள் செதுக்கி, அலங்காரங்கள் செய்து முடித்ததாகத் தாம் கேள்விப்பட்டதை எழுதி வைத்திருக்கிறார். மனிதர்களால் செய்ய முடியாத அளவில் மாட்சிமிகுந்த உயர்ந்த கட்டடங்களாகத் தோன்றியதால், அவர் அவ்வாறு நம்பி எழுதினார் போலும். அவருக்குப் பின் 200 ஆண்டுகள் கழித்து வந்த ஹுவான்சாங் காலத்தில் அரண்மனையும், நகரமுமே இடிந்து விழுந்து பாழடைந்திருந்ததாகக் குறித்திருக்கிறார். பாட்னா நகரைச் சுற்றிப் புதைபொருள் ஆராய்ச்சி செய்வதற்காகப் பல இடங்கள் தோண்டிப் பார்க்கப்பட்டுள்ளன. இன்னும் பெரும் பொருள் செலவு செய்து திட்டமான முறையில் தோண்டிப் பார்த்தால், பழைய பாடலியைப் பற்றியும், அசோகர் ஆட்சி பற்றியும் விளக்கம் பெறக்கூடிய பல பொருள்கள் அகப்படக் கூடும். அசோகர் அமைத்த கட்டடங்களும், விகாரங்களும் கால வெள்ளத்தில் சிதைந்தவை தவிர, பின்னர்ப் படையெடுத்து வந்த வெள்ளை ஹூணர்களாலும் அழிக்கப்பட்டன.

பல்கலைக் கழகம் அமைந்திருந்த நாலந்தாவிலும் அசோகர் பல பெரிய கட்டடங்கள் கட்டியிருந்தார், அங்கு நடந்து வரும் புதைபொருள் ஆராய்ச்சியினால் நமக்கு மேலும் பல விவரங்கள் தெரிய வரலாம்.

For more ebooks vist: http://getmyebook.in/

அசோகர் அமைத்த அரண்மனைகள், விகாரங்கள் முதலியவற்றை நாம் காண முடியாவிட்டாலும் அவரால் நடப்பெற்று ஓங்கி உயர்ந்து நிற்கும் கல் தூண்களிலே இன்னும் சில இருக்கின்றன. மிகவும் பாரமுள்ள ஒரே கல்லில், சிங்கம் முதலிய உருவங்கள் அமைந்த வேலைப்பாடுள்ள சிகரத்துடன் தூண்கள் செய்து, அவற்றில் தம் சாசனங்களைச் சிற்றுளியால் வரைந்து வைப்பதில் அசோகர் மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருந்தார். முப்பதுக்கு மேற்பட்ட அத்தகைய கல்தூண் சாசனங்களில் பதின்மூன்று அகப்பட்டிருக்கின்றன. இந்தத் தூண்களைப் பளபளப்பாக இழைத்து, பல நூறு கிலோ மீட்டர்களுக்கு அப்பால் குறித்த இடங்களுக்கு அசோகருடைய பொறியியல் வல்லுநர்கள் எப்படித்தான் கொண்டுபோய்ச் சேர்த்தனரோ என்று வியக்கும்படி அவை உள்ளன. இத்தகைய கல்தூண் ஒன்றின் சிகரத்திலுள்ள மூன்று சிங்கங்களே இன்று சுதந்தர இந்திய அரசாங்கத்தின் சின்னமாக விளங்குகின்றன. அசோகர் செதுக்கி வைத்த தரும சக்கரமும் நம் நாட்டுக் கொடியின் நடுவில் இடம் பெற்றிருக்கின்றது.

பாறைகளிலே அசோகர் பொறித்து வைத்த இருபத்து மூன்று கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப் பெற்றிருக்கின்றன. மூன்று குகைகளிலே சிறு கல்வெட்டுக்களும் உள்ளன. மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லக்கூடிய பெரிய சாலைகளின் அருகிலும், உயர்ந்த பாறைகளிலும் அசோகர் தம் மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் அறிவுறுத்த விரும்பிய

For more ebooks vist: http://getmyebook.in/

செய்திகளை வரைந்து வைத்ததால், நாட்டின் பல பகுதிகளிலும் பெரும்பாலான மக்கள் அவற்றைப் படித்துத் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அசோகர் காலத்தில் பாரத நாடு ஆசியப் பேரொளியாக விளங்கிற்று என்பதை அவர் கல்வெட்டுக்களிலிருந்தே கண்டு கொள்ளலாம். போர் முழக்கங்களைத் தருமப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தினார்; ஆயுதச் சாலைகளை அன்பு வார்க்கும் ஆலயங்களாக்கினர்; குத்தியும் வெட்டியும் கொன்று குவித்துக்கொண்டிருந்த மக்களெல்லாம் தம்மைப் போல் மனமாற்றம் அடையும்படி செய்தார்.

அசோகருடைய கட்டளைகள் பெரும்பாலானவை அவர் மக்களுக்குச் செய்யும் அறிவுரைகளாகவே அமைந்துள்ளன. அவற்றில் எவ்வித ஆடம்பரமும் இல்லை. அவை எளிய சொற்களில், யாவரும் புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக, அவை மனத்தோடு மனம், ஆன்மாவோடு ஆன்மா பேசுவதுபோல் அமைந்திருக்கின்றன. பெரும்புலவர்கள், கவிஞர்கள் வழங்கும் சொற்றொடர்களை யெல்லாம் நீக்கி, உயர்வுநவிற்சி அணிகள் இல்லாமல், அருள் மிகுந்த அசோகர் அவ்வக் காலத்தில் தமக்குத் தோன்றிய உயர்ந்த கருத்துக்களையே கல்வெட்டுக்களாக அமைத்திருக்கிறார் மாபெரும் கல் தூண்களை நடுதல் அசோகருக்கு முன்னர்ப் பாரசீகத்து வழக்கம் என்றும், அதற்கும் முன்னர் அசீரியாவில் அம்முறை இருந்தது என்றும் வரலாற்று ஆசிரியர் கூறுவர். எந்த நாட்டு முறையா யிருந்த போதிலும், அசோகர் கற்களிலே தம்

For more ebooks vist: http://getmyebook.in/

செய்திகளை எழுதி வைத்ததால்தான் அவை நெடுங்காலம் நிலைத்திருக்க முடிந்தது. ' கல் மேல் எழுத்து' அழியாமலிருக்கும் என்று பலரும் நம்புதல் இயல்பு. ஆனால் எழுத்தைத் தாங்கி நின்ற கற்களே காணாமற் போய்விட்டால் என்ன செய்வது ? அசோகர் நட்டுவைத்த தூண்களில் சில உடைந்து போய்விட்டன; சில மண்ணுக்குள் மறைந்திருக்கின்றன. புத்தர் பிரான் தோன்றிய உலும்பினியில் அவர் நட்டிருந்த தூண் கீழே சாய்ந்து, அதன் மேல் பல நூற்றாண்டுகளாக மண் குவிந்து, அதை மூடிவிட்டது. மண்ணைத் தோண்டிப் பார்க்கையில் அக்கம்பம் அகப்பட்டது. இல்லையெனில் அசோகர் அங்கே சென்றிருந்த விவரம் தெரியாமற் போயிருக்கும். தவிரவும், உலும்பினியில் பகவான் புத்தர் பிறந்த இடமும் தெரிந்திராது.

அசோகருக்குப் பகவான் புத்தரிடம் அளவற்ற பக்தி இருந்ததுடன், பௌத்த சமயத்தைப் பரப்பவும் அவர் அரும் பெரும் முயற்சிகள் செய்து வெற்றியும் கண்டார். அவரது காலம்வரை பௌத்த சமயம் வட இந்தியாவில் சில இடங்களில் மட்டுமே பரவியிருந்தது. ஜனக முனிவரைப் போல் பேரர ச ரா கி ய அ வ ரே துறவியாகிப் பிரசாரம் செய்ய முற்பட்டதால், பௌத்தம் நாடெங்கும் பரவவும், காஷ்மீர், நேப்பாளம், சீனா , சிங்களம் முதலிய நாடுகளிலெல்லாம் பரவவும் வழி பிறந்தது. அத்தருமத்தின் பெருமையும் உச்ச நிலையை அடைந்தது.

ஆனால், அசோகர் தம்முடைய பெரும்பாலான கல்வெட்டுக்களின் மூலம் எந்தத் தருமத்தைப்

For more ebooks vist: http://getmyebook.in/

பரப்பியுள்ளார்? அவற்றைப் படித்துப் பார்த்தால் , அவை எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகக் கருதப்பெறும் அடிப்படையான தருமத்தையே அவர் உபதேசம் செய்திருப்பது தெரியவரும். மானிட வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுக்க விதிகளையே அவர் மிகுதியும் வற்புறுத்தியுள்ளார். அவர் பௌத்தர் என்பதிலும், பௌத்த சமயத்திற்காக அவர் தீவிரமாக உழைத்தார் என்பதிலும் ஐயமேயில்லை. ஆயினும் அவர் மக்களுக்கும், அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்த அதிகாரிகளுக்கும் சர்வ சமய சமரசமான மார்க்கத்தையே வற்புறுத்தி வந்தார் என்பது தெளிவு. தாய் தந்தையரைப் பேணுதல், சத்தியம், அஹிம்சை, அன்பு முதலியவை யாருக்குத்தான் தேவையில்லை ? அவற்றையே அவர் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டுள்ளார்•

**ச**மயச் செருக்கோ, பிற சமயப் பழிப்போ அவரிடம் துளியும் இருந்ததில்லை என்று அவர்தம் எழுத்துக்களைத் தாங்கி நிற்கும் ஒவ்வொரு பாறையும், ஒவ்வொரு தூணும் உறுதி கூறுகின்றன. பௌத்த துறவிகளான சிரமணர்களை அவர் தெய்வமாக எண்ணி வழிபட்டார். ஒழுக்கத்தில் சிறந்து விளங்கிய பெரியோரையும் அவர் வனங்ககி, அவர்களுக்குத் தான தருமங்கள் செய்திருக்கிறார் என்று தெரிகின்றது. அவருக்குப் பின்னர்ப் பதினெட்டு நூற்றாண்டுகள் கழிந்த பின், பாரத நாட்டுப் பேரரசரான அக்பரிடமும் அத்தகைய சமய சமரசத்தைக் காண்கிறோம்.

கல்வெட்டுக்களிலே சுவர்க்கம், நரகம், தேவர்கள், தெய்வங்கள் என்றெல்லாம் அசோகர் கூறிய

For more ebooks vist: http://getmyebook.in/

சொற்களைக் கொண்டு, அவர் பௌத்த தருமத்தில் முழுவதும் ஈடுபட்டவ ரல்லர் என்று கருதிவிடக் கூடாது. அவரது சமயக் கொள்கையில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த போதிலும், அக்காலத்திய மக்களுக்கு உடனே தெளிவாக விளங்குவதற்காக அவர் அச்சொற்களைப் பயன்படுத்தியதாகவே கொள்ளவேண்டும். சுவர்க்கமும் நரகமும் தனித் தனி உலகங்களாக இருக்க வேண்டியதே யில்லை. இந்த உலகிலேயே சீலம் பேணி, அறவழியில் நிற்பவர் சுவர்க்கத்தைக் காணலாம்; அல்லாதவர் நரகத்தைக் காணலாம். மேலும் இந்துக்களும் பிறரும் சுவர்க்கம், மோட்சம், முத்தி என்று கூறுவதைப் பௌத்தர்கள் 'நிருவாணம்' என்பார்கள்.

அசோகரது மனப்பான்மை தெள்ளத்தெளிவாகத் தெரிவிக்கப் பெற்றுள்ளது.எவரும், தம் ச ம ய த் தை யே பெரிதெனப் போற்றி, பிற சமயங்களை இழித்துப் பேச வேண்டா என்று அவர் கேட்டுக்கொண்டார். எவரெவர் எந்தெந்தச் சமயத்தைச் சேர்ந்திருந்தாலும், அதில் தீவிரமாக இடைவிடாமல் மேலோங்கித் திளைக்க வேண்டும் என்பதே அவர் நோக்கம். பிரமகிரி முதலாவது பாறைக் கல்வெட்டில், 'ஜம்புத் தீவில் மனிதர்கள் இப்பொழுது கலந்து உறவாடுகிறர்கள்' என்று அவர் பொறித்திருக்கிறார். அசோகர் தாம் தருமப் பிரசாரத்தில் தீவிரமாக முயற்சி செய்த பின், மக்கள் தங்கள் சமயங்களில் மிக்க அக்கறை கொண்டுள்ளனர் என்று கருதியதையே இது குறிப்பிடுவதாக இருக்கலாம். அடுத்தாற் போல், ' இஃது என் முயற்சியின் பயன். இது சால்பு நிறைந்த

For more ebooks vist: http://getmyebook.in/

பெரியோர்களுக்கே கை கூடும் என்று கருதுவது சரியில்லை. ஏனெனில், சாதாரண மனிதரும் முயற்சியின் மூலம் சுவர்க்க இலட்சியத்தை அடைய முடியும்' என்று அக் கல்வெட்டிலேயே காணப்படுகின்றது. ஆகவே, அசோகர் விரும்பியது முயற்சி-இடைவிடாத முயற்சி-என்றே தெரிகின்றது. இதிலிருந்து அவரால் வெறுக்கப்பட்டவை எவையென்றும் கண்டு கொள்ளலாம். ஒழுக்கம், சமயம் முதலியவற்றில் அக்கறையில்லாமை, எதையும் பின்னர்ப் பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளி வைத்தல், மறதி, சோம்பல், மிக்க தூக்கம் ஆகியவற்றை விலக்கினால் ஒழிய அவர் கருதிய ஆர்வம், அக்கறை, முயற்சி ஆகியவை தோன்ற முடியாது.

**'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்'**

என்றார் திருவள்ளுவர்.

இதுவரை கிடைத்துள்ள அசோகருடைய கல்வெட்டுக்களுக்குப் பல மொழிபெயர்ப்புக்களும் தனி நூல்களும் வெளிவந்துள்ளன. அவற்றையெல்லாம் படித்துப் பார்த்தால், அவர் எடுத்துக் கூறியுள்ள சகிப்புத்தன்மை, சமரசத்தோடு பொருந்தியிருத்தல், அமைதி, அறத்தின் வெற்றி (தரும விஜயம்) ஆகியவை எக்காலத்திற்கும் தேவையானவை என்பது தெற்றென விளங்கும். அன்றியும் அவர் காலத்தில் நம் நாட்டில் பலப்பல சமயங்கள், கொள்கைகள், தத்துவஞான நூல்கள் ஆகியவை ஒன்றோடு ஒன்று போட்டியிட்டுக்

For more ebooks vist: http://getmyebook.in/

கொண்டிருந்ததால், அடிப்படையான சமரச மனப்பான்மை ஏற்படுவதற்காக அவர் அரும்பாடுபட்டு வந்தார். சமரசத்தின் மூலம் நெருங்கிய உறவுகள் தோன்றி, மக்கட் சமூகம் ஓர் இனமாக வளர்வதற்கு அவரது வழி உதவியாயிற்று. மேலும், இந்தியா போன்ற ஒரு பரந்த பெருநாட்டில், மக்கள் இனங்களை ஒன்று சேர்த்து, மாநிலங்களிலும், மத்தியிலும் ஓர் ஆட்சி நிலைத்து நிற்பதற்கும் மூலமாக உதவக் கூடிய ஒரு செயல் இன்றியமையாதது. அந்தச் செயலை அசோகர் தமது தருமத்தின் மூலமே அமைத்துக் கொண்டார்.

கல்வெட்டுக்கள் 'மாகதி' என்று சொல்லப் பெறும் மகத நாட்டு மொழியில் உள்ளவை. அம் மொழியைப் பிராகிருதம் என்றும் சொல்லுவர். அவற்றிலுள்ள வாக்கியங்கள் அலங்காரங்கள் இல்லாமல், சாதாரண மக்களின் பேச்சுப் போலவே உள்ளன. இவற்றைக் கொண்டு, அவை அசோகப் பேரரசரின் திருவாயிலிருந்து நேராக வந்த சொற்கள் என்றும், அவற்றை வேறு எவரும் திருத்தவோ, மாற்றவோ துணிந்திருக்க முடியாது என்றும் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

# 6. ஆட்சி முறையும் மக்கள் வாழ்க்கையும்

அசோகரது பேரரசைப் போன்ற விரிந்த எல்லைகளுடைய பேரரசு இந்தியாவில் எக்காலத்தும் ஏற்பட்டதில்லை. இக்காலத்திலுள்ள ஆப்கானிஸ்தானம், பலுசிஸ்தானம், சிந்து, கச்சு, காஷ்மீர், நேப்பாளம், தமிழகம் நீங்கலாக மற்ற இந்தியா முழுதும் அந்தப் பேரரசுக்குள் அடங்கியிருந்தன. திபெத்து நாட்டில் ஒரு பகுதியும், அசோகர் ஆட்சிக்கு உட்பட்டதாகவும், அவர் அந்நாட்டிற்கும் எழுந்தருளியிருந்ததாகவும் அந்நாட்டுக் கதைகள் கூறுகின்றன. அஸாம் மட்டும் தனி அரசாக இருந்து வந்தது.

பேரரசு முழுதும் பெருவேந்தரின் ஆட்சியிலேயே இருந்தது. அவருக்கு மேல் எவரும் இல்லாத நிலையில், முடிவான அதிகாரங்கள் அனைத்தும் அவரிடமிருந்தன. ஆகவே தோற்றத்திற்கு அவர் சர்வாதிகாரியாயிருந்தார். ஆனால் நடைமுறையில் இந்தியாவில் அப்படி இருப்பதற்கில்லை. பேரரசரும் அறநூல் நெறிகளுக்குக் கட்டுப்பட்டவர். இக்காலத்து முறைப்படி சட்டங்கள் பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட நூல்களாக அச்சிட்டு வைக்கப்பெறவில்லை; என்றாலும், அக்காலத்திலும் சட்டங்கள் இருந்தன. பல சமயத்தார்களும், சாதியார்களும், பல பிரதேச மக்களும் தொன்று தொட்டுப் பின்பற்றி வந்த பழக்க வழக்கங்களைக் கொண்டே சட்டங்கள் நிர்ணயிக்கப் பெற்றன. தருமம் பற்றியும், ஒழுக்கம் பற்றியும்

For more ebooks vist: http://getmyebook.in/

பொதுவான விதிகளும் இருந்தன. இவற்றையெல்லாம் பேரரசர் தம் விருப்பப்படி, நினைத்தபோது தூக்கி எறிந்து விட முடியாது. மிகுந்த திறமையும், கல்வியும், கேள்வியும், நீதியும், மதிநுட்பமும் வாய்ந்த மந்திரிகளையும் எப்பொழுதும் புறக்கணித்துக் கொண்டிருக்க முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தியாவில் ஒரு மத்திய அரசாங்கம் ஏற்படுவதற்கு முன்னர், கிராமங்களும் நகரங்களும் காரியங்களைப் பெரும்பாலும் தாமே நிறைவேற்றிக் கொண்டிருந்தன. ஓரளவில் அவற்றைக் குட்டிக் குடியரசுகள் எனலாம். அந்த நிலையில் பேரரசரின் அதிகாரம் ஒரு கட்டுக்குள் அடங்கியதே என்று சொல்ல வேண்டும். அதிலும் அசோகர் தாமாகவே தமக்கென்று மேலும் பல கட்டுப்பாடுகளை அமைத்துக்கொண்டார் என்பதை அவருடைய ஆணைகளிலிருந்து தெரிந்துள்ளோம். உண்ணும் பொழுதும், உறங்கும் பொழுதும்கூட அரசாங்கக் காரியங்களுக்காகத் தம்மிடம் எவரும் வரலாம் என்று அவர் விதித்திருந்தார்.

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் தலைநகரான பாடலிபுத்திரத்தில் இருந்துகொண்டு மாபெரும் அரசை அசோகர் நெடுங்காலம் ஆளமுடிந்தது என்றால், அதற்குத் தேவையான சூழ்நிலைகளை அவர் அமைத்துக் கொண்டதாலேயே அது முடிந்தது. அவருக்கு அடுத்தாற்போல் அவருக்குப் பிரதிநிதிகளாக நான்கு மாநிலங்களில் நான்கு இளவரசர்கள் நியமிக்கப் பெற்றிருந்தார்கள். அவர்கள் வடக்கே தட்சசீலம், நடுவே உச்சயினி, கிழக்கே தொசலி, தெற்கே சுவர்ணகிரி ஆகிய நகரங்களில்

For more ebooks vist: http://getmyebook.in/

தங்கியிருந்தனர். இந்த அரசப் பிரதிநிதிகளுக்கு அடுத்தாற்போல், அவர்களுக்குக் கீழே, இராஜுகர்களும், அவர்களுக்கு அடுத்தபடியில் பிரதேசிகர்களும் நியமிக்கப் பெற்றிருந்தனர். இவ்விருவகை அதிகாரிகளையும் சேர்த்தே 'மகா மாத்திரர்கள்' என்று அசோகர் குறிப்பிட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. மகாமாத்திரர்கள் இக்காலக் 'கவர்னர்'களைப் போன்றவர்கள். அவர்களுக்குக் கீழே யுக்தர்கள், உப யுக்தர்கள், மற்றும் பல நிர்வாகிகளும், அலுவலர்களும் வேலை செய்து வந்தனர். அசோகர் ஆட்சியில் அரசாங்க இயந்திரம் எந்தப் பகுதியிலும் தூங்கி விழுந்துகொண்டிராமல் சுறுசுறுப்பாக அரசியலை நடத்தி வந்துள்ளது.

அசோகர், தாம் முடி புனைந்த கொண்ட பதினான்காம் ஆண்டில் தரும மகாமாத்திரர்களையும், அவர்களுக்கு வேண்டிய உதவி அதிகாரிகளையும் நியமித்தார். அவர் சாசனங்களில் விவரித்துள்ள ஒழுக்கங்கள், தருமங்களை, மக்கள் முறையாகக் கடைப்பிடிக்கவும், குறைகள் ஏற்பட்டால் திருத்தவும் வேண்டிய பணி அவர்களுக்கு இருந்தது. அரசருடைய குடும்பத்தவர்களையும் அவர்கள் கண்காணித்து வரவேண்டும் என்று ஆணையிடப்பட்டிருந்தது. மேலும் தண்டனை அடைந்தவர்களின் நிலைமையை அறிந்து பரிகாரம் செய்யவும் அந்த அதிகாரிகள் உதவியாயிருந்தார்கள்.

மாநிலத் தலைமை அதிகாரிகளாக விளங்கிய மகாமாத்திரர்களுக்குச் சிறப்பு அதிகாரங்கள் வழங்கப் பெற்றிருந்தன. ஏனெனில் பல பிரதேசங்களில்

For more ebooks vist: http://getmyebook.in/

அவர்களே மக்களின் நன்மை தீமைகளே விசாரித்துக் கண்டு கொள்ளக்கூடும். அரசப் பிரதிநிதிகள் மூலமே யன்றி, பேரரசரின் நேரிலும் அவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்க முடியும். அரசப் பிரதிநிதிகளும், மகாமாத்திரர்களும் பின் பற்றவேண்டிய சட்டங்கள் எவை? வேறு பல அரசர்கள் சட்டங்களை அவ்வப்போது ஏட்டில் எழுதுவார்கள். ஆனால், அசோகரோ அவற்றைக் கற்களிலே நிரந்தரமாகத் தீட்டிவைத்து விட்டார். ஆகவே அவரிடம் இருந்த அதிகாரங்கள் சட்டம் இயற்றல், பாசன வசதிகள் அமைத்தல் முதலிய மராமத்து வேலை, தருமப் பாதுகாப்பு ஆகியவை. இவற்றுடன் பௌத்த சங்கத்திற்கும் அசோகரே சமயத் தலைவராயிருந்து கட்டளைகள் செய்து நிறைவேற்றி வந்ததால், அஃதும் அவர் பொறுப்பில் சேர்ந்தது. அந்த முறையில் அவர் அரசியல் தலைவராயும், சமயத் தலைவராயும் விளங்கி வந்தார். அடிக்கடி அவர் தாம் சுற்றுப் பிரயாணம் செய்ததுபோல் மற்றும் பெரிய அதிகாரிகளும் நாடெங்கும் சுற்றி வரவும் ஏற்பாடு செய்திருந்தார்.

பேரரசரின் அலுவல்களுக்கு உதவியாளராக இக்காலத்தைப் போல, அப்போது காரியதரிசிகள் இருந்தனர். அவருக்கு ஆலோசனை கூறுவதற்குப் 'பரிஷத்' என்று வழங்கப்பெறும் அமைச்சர் அவையும் இருந்தது. அவ்வவையில் எத்தனை அமைச்சர் இருந்தனர் என்பது தெரியவில்லை. பிந்துசாரர் காலத்தில் 500 அமைச்சர் இருந்தனராம்.

இராணுவத்தில், வழக்கம்போல், தேர்கள், யானைகள், குதிரைகள், காலாட்களைக் கொண்ட நால்வகைப்

For more ebooks vist: http://getmyebook.in/

படைகளும் இருந்தன. தேவைப்படும் போது போர்ப்பயிற்சி யுள்ளவர்களைப் படையாகச் சேர்த்துக் கொள்ளும் முறையின்றி, நிலையாக ஊதியம் கொடுத்துப் பெரும்படைகள் வைக்கப் பெற்றிருந்தன. ஆறுகளில் சென்று வந்த ஓடங்கள், கப்பல்களுடன், கடலில் செல்லும் பல கப்பல்களும் இருந்தன. போர் அலுவலகம் முப்பது பேர்களைக் கொண்ட ஒரு சபையால் நிருவகிக்கப் பெற்று வந்தது. யவன ஆசிரியர்கள் எழுதியுள்ள வரலாறுகளிலிருந்து படை வீரர் பயன்படுத்திய ஆயுதங்களையும், தேர்கள் போர்களிலே செலுத்தப்பட்ட முறைகளையும், சாதாரணமாகச் சாலைகளிலே மாடுகளால் இழுத்துச் செல்லப்பட்டதையும் காண முடிகின்றது.

ஆனால், அசோகரோ, கலிங்கப் போருக்குப் பின்னர் ஒரே ஆணையில் போரையே ஒழித்துவிட்டார். போர் முழக்கமே மீண்டும் கேட்காதபடி அவர் தடைசெய்து விட்டார். எங்கும் தரும பேரிகையின் முழக்கமே கேட்கவேண்டும் என்பது அவர் கட்டளையாகிவிட்டது.

அக்காலத்தில் பெருஞ் சாலைகள் பல அமைக்கப்பட்டன. பாடலிபுரத்திலிருந்து, தட்சசீலத்தின் வழியாக, சிந்துநதி வரை மிகப் பெரிய சாலை ஒன்று அமைந்திருந்தது. சாலையின் இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்கள் வளர்க்கப் பெற்றன. தொலைவு தெரிவதற்காக ஏறக்குறைய இரண்டு கிலோ மீட்டருக்கு ஒரு தூண் வீதம் நிறுத்தப்பட்டிருந்தது. தூணுக்கு அருகில் ஒரு கிணறும், வழியில் பிரயாணிகள் தங்குவதற்கு வேண்டிய விடுதிகளும், கொட்டகைகளும் அமைக்கப்பட்டன. வேறு பல

For more ebooks vist: http://getmyebook.in/

சாலைகளும் செம்மையான முறையில் அமைந்திருந்ததாலேயே அரச காரியங்கள் விரைவாகவும் செம்மையாகவும் நிறைவேற வாய்ப்பு இருந்தது.

அரசாங்க வருவாயில் இன்றியமையாத ஒரு பகுதி நிலவரி. மற்றும் வாணிகம், பொருள்கள் முதலியவற்றிற்கும் வரிகள் வாங்கப்பட்டன. செலவுகளில் இன்றியமையாதவை அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள், இராணுவத்திற்கான செலவு, பொதுத்துறைப் பணிக்காக ஒதுக்கப் பெற்ற தொகைகள் ஆகியவை. பேரரசின் குடும்பத்திற்காக வருவாயில் ஒரு சிறு பகுதியே பயன்பட்டிருக்கும். ஏனெனில், அவருக்கென்று தனி நிலங்கள் பல இருந்தன.

வலிமை மிக்க பேரரசு ஏற்பட்டதிலிருந்து சமுதாய நிலையிலும் அதற்கேற்ற மாறுதல்கள் ஏற்பட்டன. பயிர்த்தொழிலும் கைத்தொழில்களும் பெருகியதுடன், வாணிகமும் செழிப்படைந்தது தொழில்கள் தனித்தனிச் சங்கங்களாக அமைந்அதிகரித்தன. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை அரசாங்கம் தணிக்கை செய்ததுடன், உடனுக்குடன் பார்வையிட்ட சரக்குகளின்மீது முத்திரையிட்டு விற்பனைக்கும் அனுப்பி வந்தது. விலை வாசிகளும், வணிகருக்குரிய இலாபங்களும் அவ்வப்போது வகுக்கப்பெற்றன. அளவுக்குமேல் வணிகர்கள் பெற்ற ஆதாயங்கள் அரசாங்கத்திற்கு உரியவை. வாணிகத்திற்கான சட்ட திட்டங்கள் நுணுக்கமாக ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டன.

For more ebooks vist: http://getmyebook.in/

உலோகங்களின் பயன்கள் அக்காலத்தில் பெருகியிருந்தன. பய னு ள் ள பொருள்கள் செய்வதற்கு இரும்பும், செம்பும், ஈயமும் பயன்படுத்தப் பெற்றன. நகைகள் முதலியவற்றிற்காகவும், சேமித்துவைக்கவும் தங்கமும் வெள்ளியும் புழக்கத்தில் இருந்தன.

சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவில் சாதிகள் தொழில்களின் அடிப்படையில் அமைந்திருந்ததால், அவை நீடித்து நின்றன. புத்தர் காலத்தில் சாதிகளின் கொடுமை குறைந்திருக்கலாம். பௌத்தர்களில் சாதி வேற்றுமை இல்லை. அசோகர் காலத்தில் அவர், பிராணிகளை வதைத்து, யாகங்கள் செய்தல் முதலியவற்றைத் தடை செய்தார். ஒழுக்கமும் தருமமும் வளர வேண்டுவதே இன்றியமையாதது என்று அவர் கருதினார்.

இந்தியாவில், யவன நாட்டைப் போல அடிமைகளை விற்று, வாங்கி, வேலை வாங்கும் முறை இல்லை என யவன ஆசிரியர்கள் கூறியுள்ளார்கள். ‘இந்தியர்கள் எல்லாரும் சுதந்தர மக்கள்; அவர்களில் ஒருவர்கூட அடிமையில்லை’ என்று அரியன் என்னும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் தனிச் சொத்துக்கள் வைத்துக் கொள்ளலாம்; தங்கள் உழைப்புக்குத் தக்கபடி ஊதியமும் பெற முடியும். முன்னோர் தேடிவைத்த செல்வத்தை அவர்களுடைய பரம்பரையினர் பெறவும் உரிமை உண்டு. இங்ஙனம் அசோகரின் அரசியல் தன்னிகரற்றுத் தழைத்து விளங்கியது.

For more ebooks vist: http://getmyebook.in/

# 7. அசோகரின் அருங்குணங்கள்

இந்திய வரலாற்றிலேயே அசோகரின் காலம் பொன்னேட்டில் எழுதத் தக்க பெருமையுடையதாகும். நம் தாயகத்தின் தவச் செல்வமாய் விளங்கிய மனித குலமாணிக்கம் ஜவகர்லால் நேரு அவர்கள் பேரரசர் அசோகரின் புகழ் நிரம்பிய வரலாற்றை இந்தியவரலாற்றின் புகழ் மண்டிய பகுதி என்று சுட்டிக்காட்டியுள்ளார். ‘எல்லாரும் இந்நாட்டு மன்னர்’ என்னும் குடியரசுக் கொள்கையை மேற் கொண்ட ஜவகர் அசோகரின் கொள்கைகளையும் செயல்களையும் பாராட்டியுள்ளார். அசோகர் பேரரசராக இருந்தும் மனிதப்பண்பு நிரம்பியவராக இருந்ததால் முடிமன்னரை வெறுக்கும் ஜவகர் அசோகரிடம் மட்டும் பெருமதிப்புக் கொண்டிருந்தார்.

நல்லரசர் ஒருவருக்கு வேண்டிய அருங்குணங்கள் யாவும் அசோகரிடம் ஒருங்கே பொருந்தி இருந்தன.

**“அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற் கியல்பு”**

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க, அச்சமில்லாமை, கொடுக்கும் தன்மை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய நான்கு குணங்களும் அசோகரின் பிறவிக் குணங்களாகவே அமைந்திருந்தன என்று கூறலாம். இப்பண்புகளாலேயே அவர் எடுத்த செயல்கள் யாவற்றிலும் வெற்றி மாலை சூடினார். இந்தியாவில் பரந்த நிலப்பரப்பை ஆண்ட பெருமன்னருள் அசோகர் தலைசிறந்தவராக எண்ணப்படுகிறார்.

For more ebooks vist: http://getmyebook.in/

புவியாளும் மன்னர்க்கு வேண்டிய இன்றியமையாத குணங்கள் காட்சிக்கு எளியவராக இருத்தலும் கடுஞ்சொல் அற்றவராக இருத்தலும் ஆகும். அசோகர் தம் குடிமக்களைத் தம் குழந்தைகளைப் போலப் பாராட்டி என்றும் எளிமையாகவே நடந்து கொண்டார். பொது நன்மையை அன்புமுறையிலேயே வளர்க்க எண்ணிய அசோகர், தம்மைக் கண்டு முறையிட விரும்பும் குடிமக்கள் தம்மை எந்த நேரத்திலும் வந்து காண இசைவளித்தார். “நான் உண்ணுகிறேன்; உறங்குகிறேன் என்று பாராமலும், கொலுமண்டபத்தில் இருக்கிறேன், மாதர்களோடு இருக்கிறேன், தோட்டங்களில் உலவிவருகிறேன் என்று பாராமலும் எல்லா நேரங்களிலும் அரசியல் அலுவலர்கள் நாட்டு நிகழ்ச்சிகளை என்னிடம் கூறவேண்டும்” என்று அவர் ஆணையிட்டிருந்தார். அசோகரின் எளிமைக்கு இதைவிடச் சிறந்த சான்று வேண்டுமோ?

அசோகர் அன்பே உருவமானவர்; ஆற்றிவுள்ள மக்களிடம் காட்டும் அன்பைப் போல ஐயறிவு உடைய உயிர்களிடமும் அவர் அன்பு காட்டினார். விலங்குகளுக்கு நோய்வந்தால் அவற்றுக்கு மருத்துவம் செய்வதற்காகத் தனியே உயர்மருத்துவ நிலையங்களை ஏற்படுத்தினார்; உயிர்களைப் பலியிடும் கொடுமையைப் போக்கினார். அசோகரின் அன்பு நெறி காரணமாக அவர் காலத்தில் மாமிச உணவு உண்டவர்களும் மரக்கறி உணவை உண்ணலானார்கள்.

**‘அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால்**

For more ebooks vist: http://getmyebook.in/

**இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே'**

என்பது தாயுமானவரின் வாக்கு. அவ்வாக்கிற்கிணங்க அசோகர் தம் நாட்டுக் குடிமக்களின் பொதுநலப் பணிகளில் பேரார்வம் காட்டிவந்தார். அவரது அறப்பணியால் நாடெங்கும் சாலைகள் அமைந்தன; சோலைகள் தழைத்தன; நீர் நிலைகள் தோன்றின; மருத்துவ நிலையங்கள் மலர்ந்தன; கல்வி நிலையங்கள் ஏற்பட்டன; பெண் கல்வியும் எங்கும் தழைக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அசோகர் என்றும் தற் பெருமை கொண்டதில்லை. பெரிய நிலப்பரப்பை ஆளும் பேரரசராக இருந்த போதிலும் அவர் தம்மைப் பேரரசர் என்று கூறிக் கொண்டதேயில்லை. 'தேவர்களுக்கு உகந்த பிரியதரிசி மன்னர்' என்றே தம்மைப் பலவிடங்களிலும் கூறிக்கொள்வார்.

அசோகர் பௌத்த சமயத்தவராயினும் எந்தச் சமயத்தவரிடமும் வெறுப்புக் கொண்டதில்லை. ஒருவர் தம் சொந்த சமயத்தைப் புகழ்வதற்காக மற்றொருவர் சமயத்தைக் குறைகூறுவது தவறு என்று அசோகர் கருதினார். எல்லாச் சமயங்களின் சமரசமே மேலானது என்று அனைவருக்கும் அறிவுரை கூறினார். அவர் காலத்தே பலவகை சமயத்தினரும் ஒன்றுபட்ட உள்ளத்துடன் அன்புற்று இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

விடா முயற்சி வெற்றிக்கு அடிப்படை என்னும் சீரிய கொள்கையைச் சிரமேற் கொண்டவர் அசோகர். மக்கள் எப்போதும் எறும்பைப் போல் உழைத்த வண்ணமாகவே இருக்க வேண்டுமென அவர்

For more ebooks vist: http://getmyebook.in/

விரும்பினார். அவர் தம் கல்வெட்டுக்களில் முயற்சியின் சிறப்பைக் குறித்து வரைந்துள்ளார். அல்லும் பகலும் விழிப்போடிருந்து வேலை செய்வதே அவருக்கு மனநிறைவை அளித்தது.

அசோகர் பகைவருக்கும் அன்பு காட்டும் பண்புடையவர். கலிங்கப் போரில் ஆயிரக்கணக்கான பகைவர்களைப் பழிவாங்கும் எண்ணமின்றி விடுதலை செய்தார். தம் அதிகாரிகளுக்கும் பகைவருக்குத் தீங்கு செய்யலாகாது என்று அறிவுரை கூறினார். எல்லைப்புற மக்கள் தமக்காகச் சிறிதும் அஞ்ச வேண்டுவதில்லை என அறிக்கை வெளியிட்டமை இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

அசோகர் ஒரு கலைப்பிரியர். விகாரங்களும் தூண்களும் அவர் காலத்தில் சிறப்பாகக் கட்டப்பட்டன, நாடகக் கலையும் நாட்டியக் கலையும் வளர்ச்சியடைய அசோகர் வேண்டிய ஏற்பாடுகளை விருப்புடன் புரிந்தார். பலவகைக் கலைஞர்களும் அவரது ஆட்சியில் ஆதரிக்கப்பட்டார்கள்.

இங்ஙனம் அருங்குணங்கள் பலவற்றுக்கும் உறைவிடமான அசோகரின் நீதியும் நேர்மையும் மிக்க ஆட்சியில் குடிமக்கள் எல்லாரும் வளமெல்லாம் நிறைந்து அமைதியும் பெற்று வாழ்ந்தார்கள். நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெருகி இன்புற்று வாழ்ந்தார்கள்.

‘மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி’ என்னும் பொன் மொழிக் கிணங்கக் குடிமக்கள் அரசரைத் தெய்வமாகப்போற்றி அவர் அறிவுரைப்படி நடந்தனர். அசோகரின் புகழ் மணம் அவனி யெங்கும் பரவியது.

For more ebooks vist: http://getmyebook.in/

சரித்திரச் சோலையிலே அசோகரின் வரலாறு என்றும் வாடாமலராகப் பூத்துக் குலுங்கும் என்பதில் ஐயமில்லை.

For more ebooks vist: http://getmyebook.in/

# கட்டுரைப் பயிற்சி

## கட்டுரைகளுகளும் நினைவுக் குறிப்புக்களும்

**1. மகத நாட்டின் பெருமைகள்:**

(1) முன்னுரை, (2) பழந்தமிழ்நூல் குறிப்பு, (3) கல்விச் சிறப்பு, (4) கட்டடப் பெருமை, (5) புகழ் பெற்ற பெரியோர்கள் வாழ்ந்தமை, (6) நாலந்தாப் பல்கலைக் கழகம், (7) பாடலி புத்திரம், (8) கோட்டை கொத்தளங்கள், (9) நகராண்மைக் கழகம், (10) முடிவுரை.

**2. யவனர் வாழ்க்கை:**

(1) முன்னுரை, (2) கிரீஸ் நாட்டின் கலை, நாகரிகச் சிறப்பு, (3) ஸ்பார்ட்டா மக்களின் வாழ்க்கை நிலை, (4) அதீனிய மக்களின் வாழ்க்கை நிலை, (5) ஸ்பார்ட்டாவுக்கும் ஏதன்ஸ்ஸுக்கும் நடந்த போர்கள், (6) முடிவுரை.

**3. அலெக்சாந்தரின் இளமைப் பருவம்:**

(1) முன்னுரைர, (2) பிலிப் மன்னனின் பெருமை, (3) அலெக்சாந்தர் தோற்றமும் ஆர்வமும், (4) குதிரையை அடக்கிய சிறப்பு, (5) பெருமித உணர்ச்சி, (6) அரிஸ்டாட்டில், (7) போர்க் காவியத்தில் விருப்பம், (8) இருபதாம் வயதில் அரியணை ஏறுதல், (9) முடிவுரை.

**4. அலெக்சாந்தரின் வெற்றிகள்:**

(1) முன்னுரை, (2) கலகக்காரர்களை அடக்குதல், (3) பாரசீக நாட்டின்மீது படையெடுத்தல், (4) தரியஸ் மன்னனின் வீழ்ச்சி, (5) ஆப்கானிஸ்தானத்தை

For more ebooks vist: http://getmyebook.in/

வெல்லுதல், (6) இந்திய நகரங்களைக் கைப்பற்றுதல், (7) முடிவுரை.

**5. அலெக்சாந்தரும் போரஸ் மன்னரும்:**

(1) முன்னுரை, (2) அலெக்சாந்தரின் படையெடுப்பும் அம்பி சரணடைதலும், (3) போரஸ் எதிர்ப்பு , (4) ஜீலம் நதிக்கரையில் போர், (5) படைகளின் அணி வகுப்பு, (6) யானைப் படையின் நிலை, (7) போரஸ் வீழ்ச்சி, (8) போரஸின் பெருமிதம், (9) முடிவுரை.

**6. சந்திர குப்தர் பேரரசை அமைத்தல்:**

(1) முன்னுரை, (2) அலெக்சாந்தர் படையெடுப்பின் விளைவுகள், (3) சந்திர குப்தரும் செலியூகஸும், (4) சாணக்கியர் உதவி, (5) கலிங்க வெற்றி, (6) முடிவுரை.

**7. சந்திர குப்தரின் அரசியல்:**

(1) முன்னுரை, (2) பாடலி புத்திரம், (3) பல வகைப் பணிகள், (4) வாணிகம், (5) அர்த்த சாத்திரம், (6) முடிவுரை.

**8. அசோகரின் பெருமைகள்:**

(1) முன்னுரை, (2) எச். ஜி வெல்ஸ் கூற்று , (3) பரந்த மனப்பான்மை, (4) சிறுவயதிலேயே அரியணையேறுதல், (5) பௌத்த சமயத்தைப் பின்பற்றியமை, (6) பெற்ற வெற்றிகள், (7) முடிவுரை.

**9. அசோகரும் கலிங்கப் போரும்:**

(1) முன்னுரை, (2) கலிங்கத்தின் நிலைமை, (3) போர் நிகழ்ச்சிகள், (4) கலிங்கத்துப்பரணி நினைவூட்டும் காட்சிகள், (5) அசோகரின் மனமாற்றம், (6) முடிவுரை.

**10. பேரரசரின் சின்னங்கள்:**

For more ebooks vist: http://getmyebook.in/

(1) முன்னுரை, (2) புத்தர் பெருமானிடம் ஈடுபாடு, (3) விகாரங்கள், (4) தூண்கள், (5) பாழடைந்த சின்னங்கள், (6) கல்வெட்டுச் செய்திகள், (7) முடிவுரை.

**11. அசோகரின் ஆட்சிமுறையும் மக்கள் வாழ்க்கையும்:**

(1) முன்னுரை, (2) அரசியல் அதிகாரிகளும் அவர்தம் கடமைகளும், (3) தண்டனைகள், (4) பலவகைப் படைகள், (5) சாலைகள் அமைத்தல், (6) வாணிகம் (7) முடிவுரை.

**12 அசோகரின் அருங்குணங்கள்:**

(1) முன்னுரை, (2) வள்ளுவர் நெறியில் வாழ்ந்தவர், (3) காட்சிக் கெளியர், (4) உயிர்களிடத்து அன்பு, (5) பிற சமயங்களிடத்து வெறுப்பு இல்லாமை, (6) பகைவருக்கும் அன்பு காட்டுதல், (7) முடிவுரை.

For more ebooks vist: http://getmyebook.in/

# இந்த மின்னூலைப் பற்றி

உங்களுக்கு இம்மின்னூல், இணைய நூலகமான, விக்கிமூலத்தில் இருந்து கிடைத்துள்ளது[1].

இந்த இணைய நூலகம் தன்னார்வலர்களால் வளருகிறது. விக்கிமூலம் பதிய தன்னார்வலர்களை வரவேற்கிறது. தாங்களும் விக்கிமூலத்தில் இணைந்து மேலும் பல மின்னூல்களை அனைவரும் படிக்குமாறு செய்யலாம்.

மிகுந்த அக்கறையுடன் மெய்ப்பு செய்தாலும், மின்னூலில் பிழை ஏதேனும் இருந்தால் தயக்கம் இல்லாமல், விக்கிமூலத்தில் இம்மின்னூலின் பேச்சு பக்கத்தில் தெரிவிக்கலாம் அல்லது பிழைகளை நீங்களே கூட சரி செய்யலாம்.

இப்படைப்பாக்கம், கட்டற்ற உரிமங்களோடு (பொதுகள /குனு -Commons /GNU FDL )[2][3] இலவசமாக அளிக்கப்படுகிறது. எனவே, இந்த உரையை நீங்கள் மற்றவரோடு பகிரலாம்; மாற்றி மேம்படுத்தலாம்; வணிக நோக்கத்தோடும், வணிக நோக்கமின்றியும் பயன்படுத்தலாம்

இம்மின்னூல் சாத்தியமாவதற்கு பங்களித்தவர்கள் பின்வருமாறு:

For more ebooks vist: http://getmyebook.in/

- கி.மூர்த்தி
- IJohnKennady
- பிரபாகரன் ம வி
- Arularasan. G
- Deepa arul
- Balajijagadesh
- Balu1967
- Tnse anita cbe
- Tnse palanimuthu cbe
- Rabiyathul
- சத்திரத்தான்
- Info-farmer
- SUBHI SCHOOL
- Vkalaivani
- சோனாலி
- ElangoRamanujam
- Joshua-timothy-J
- CommonsDelinker
- HoboJones
- Fleshgrinder
- Be..anyone
- Patricknoddy~commonswiki
- Rocket000
- Xato
- Mecredis

For more ebooks vist: http://getmyebook.in/

1. ↑ http://ta.wikisource.org
2. ↑ http://creativecommons.org/licenses/by-sa/3.0/
3. ↑ http://www.gnu.org/copyleft/fdl.html

For more ebooks vist: http://getmyebook.in/